வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=
ஈழநாடு
Eelanadu






Email : news@eelanadu.lk | மலர் : 05 | 15.11.2023 புதன்கிழமை | இதழ் : 339 | பக்கங்கள் : 16

# நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மகிந்த, கோட்டாபய, பஸில் பொறுப்பு!

## உயர் நீதிமன்றம் நேற்று அதிரடித் தீர்ப்பு

கொழும்பு, நவம்பர் 15

**நாட்டின் முறையற்ற பொருளாதார முகாமைத் துவத்துக்கும், சீரற்ற நிதி நிர்வாகத் துக்கும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்கள் பொறுப்பு கூற வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது.**



நேற்று உயர்நீதிமன் றின் பிரதம நீதியர்சர் ஜயந்த ஜயசூரிய தலைமை யிலான ஐவர் கொண்ட நீதி யரசர்கள் குழாம், பெரும் பான்மை அடிப்படையில் இந்த தீர்ப்பை அளித்தது.

அதில் குறித்த மூவருக் கும் மேலதிகமாக, மத் திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால், டபிள்யூ. டி. லக்ஷ்மன், நிதி அமைச் சின் முன்னாள் செயலா ளர் எஸ்.ஆர். ஆட்டிகல, முன்னாள் ஜனாதிபதி செயலர் பி.பீ. ஜயசுந்தர மத்திய வங்கியின் நிதிச் சபை ஆகியனவும் இந்த பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு பொறுப்புக் கூற வேண்டும் என உயர் நீதிமன் றின் தீர்ப்பில் 11

## இலங்கைக்கு அருகே பெரும் நிலநடுக்கம்!

கொழும்பு, நவ. 15

இலங்கையை அண்மித்து 6.2 ரிச்டர் அளவில் பெரும் நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளதாக புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவிக்கின் றது.

இதனால், இலங்கைக்கு எந்தவித பாதிப்பும் கிடையாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் இந்தியப் பெருங்கடலின் ஒரு பகுதியில், கொழும்பிலிருந்து சுமார் 1326 கிலோமீற்றர் தொலைவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், 10 கிலோமீற்றர் ஆழத்திலேயே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. 11



## காஸாவில் யுத்த நிறுத்தம் கோரி எம்.பிக்களால் மகஜர் கையளிப்பு!

கொழும்பு, நவ. 15

காஸாவில் உடனடியாக யுத்த நிறுத்தத்தை ஏற்படுத் துவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தலையிடுமாறு கோரி, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத் திட்ட மகஜரொன்று, நேற்று காலை கொழும்பில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிஷ ாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், வீரசுமண வீரசிங்ஹ,ஏ.எச். எம். பௌசி, ஹலீம், இஷாக் ரஹ்மான், ஹரீஸ், தௌபீக் மற்றும் மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்களும் பங்கேற்றிருந்தனர்.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினருமான 11

## யாழ். மாவட்டத்தில் மழையினால் இதுவரை 15 குடும்பங்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் மழையால் இதுவரை 15 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள் ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று மாத்திரம் எட்டு குடும்பங்கள் அடை மழை யால் பாதிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/388 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவரும், ஜே/400 கிராம சேவகர் பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தவகையில் இது வரை 15 குடும்பங்கள் மழையால் 11

## உருக்குலைந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு!

### வவுனியா தரணிக்குளம் பகுதியில்



வவுனியா, நவ. 15

வவுனியா, தரணிக்குளம் பகுதியில் உருக்குலைந்த நிலையில் பெண்ணொருவரின் சடலமொன்று மீட்கப் பட்டுள்ளது.

குறித்த சடலத்தின் இரு கைகளும், காலும் வெட்டப் பட்டிருக்கலாம் எனச் சந்தேகிப்பதாக தடயவியல் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களை ஈச்சங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (அ)



## கிளி., முல்லையில் வெள்ளம்

கிளிநொச்சி, நவ. 15

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று பிற்பகல் கன மழை பெய்தது. இதன் காரணாக குடி யிருப்புகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளதுடன், போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

பிற்பகல் 2 மணியளவில் பெய்த மழையினால், குறித்த மாவட்டங்களின் பொன்நகர், செல்வபுரம், அறி வியல் நகர், பாரதிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டனர். (அ)

## மூளைக் காய்ச்சலினால் கிராமசேவகர் உயிரிழப்பு

### புத்தூர் கிழக்கில் துயரம்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணத்தில் மூளைக் காய்ச்சல் காரணமாக கிராம சேவகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தூர் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 48வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த கிராம சேவகர் தீபாவளி தினத்தன்று மயங்கி விழுந்துள்ளார். இந்நிலையில் அவர் அச்சுவேலி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா 11

## கிரிக்கெட்டையும் மீட்பேன்!

### ஜனாதிபதி ரணில் சபதம்



கொழும்பு, நவ. 15

இந்த நாட்டில் கிரிக் கெட் விளையாட்டை மீண்டும் வெற்றிப் பாதைக்கு கொண்டுவர விரும்புவதாகவும், வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதா ரத்தை மீளக் கட்டியெ ழுப்ப முடியுமாக இருந்தால் கிரிக் கெட்டையும் மீளக் கட்டியெழுப்ப முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் இடம் பெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிக ளுடனான சந்திப்பின்போது ஊடகவியலாளர் 11

# இப்படியும் நடக்கிறது

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போது, வழமைக்கு மாறாக மிகவும் குதூகலமான ஆளாக காணப்பட்டதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். தொலைக்காட்சிகளில் அந்தக் காட்சியை நேரலைகளில் கண்டவர்கள் கவனிக்க தவறியிருக்க மாட்டார்கள்.

வரவு - செலவுத்திட்ட அறிக்கையை வாசிக்கும்போது இடையிடையே மற்ற உறுப்பினர்களைப் பார்த்து சிரித்தவாறு அவர்களை நோக்கி எதையாவது சொல்லியவாறு வரவு செலவுத்திட்ட யோசனைகளை வாசித்துக்கொண்டிருந்தார்.

ஒருதடவை, “இதுவரை அரசாங்கங்கள் எல்லாம் மக்களிடமிருந்து எதையாவது எடுக்கின்ற யோசனைகளையே சமர்ப்பித்திருக்கின்றன. ஆனால் இப்போது தான் மக்களுக்கு கொடுக்கின்ற யோசனைகளை சமர்ப்பிக்கிறேன்” என்று சிரித்துக்கொண்டே கூறினார் ஜனாதிபதி.

ஏற்கனவே மக்களிடமிருந்து எடுக்கின்ற யோசனைகளைத்தான் தானும் நல்லாட்சி காலத்திலே சமர்ப்பித்தேன் என்பதை அவர் ஒப்புக்கொண்டது பாராட்டுக்குரியதுதான்.

ஆனால், அவர் மக்களிடமிருந்து ‘எடுக்கின்ற’ யோனைகளை சமர்ப்பித்தபோதுதான், அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சம்பந்தனும் அவரது கட்சியும் வரலாற்றில் என்றுமில்லாதவாறு அதனை ஆதரித்து வாக்களித்தனர் என்பதையும் நாம் தெரிந்துகொள்ளலாம். இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றிலேயே அரசு கொண்டு வந்த வரவு - செலவுத்திட்டத்தை ஆதரித்து வாக்களித்த ஒரே எதிர்க்கட்சி நமது கூட்டமைப்புத்தான்.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் அரச சேவையாளர்களுக்கு பத்தாயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுப்படி வழங்கப்பட்டுள்ளது. ஓய்வூதியர்களுக்கு இரண்டாயிரத்து ஐநூறு ரூபா உயர்த்தப்பட்டுள்ளது. எல்லாம் மகிழ்ச்சிக்குரியதுதான். இதனை யாவது அதிகரித்த ஜனாதிபதி பாராட்டுக்குரியவர்தான். ஆனால் இந்த அரச ஊழியர்களும் ஓய்வூதியக்காரர்களும் ஆகக்குறைந்தது ஒரு மோட்டார் சைக்கிள் ஆவது பயன்படுத்துவார்கள். அடுத்த ஆண்டு முதல் எரிபொருளுக்கு வற் வரி விதிக்கப்படவிருப்பதாக ஏற்கனவே வர்த்தமானி வெளியிடப்பட்டு விட்டது. அதாவது பதினெட்டு வீதம் அவர்களது எரி பொருளுக்கான செலவு கூடப் போகின்றது.

அதாவது சம்பளஅதிகரிப்பாக கொடுத்து ஜனாதிபதி வரியாக எடுக்கப்போகிறார் அவ்வளவுதான்.

அதுவல்ல இன்று சொல்ல வந்தது.

யுத்தம் முடிந்ததும் யுத்தத்தை வெற்றிகொண்டவர் என்று அப்போதைய பாதுகாப்பு செயலாளராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவே கொண்டாடப்பட்டார். அதனால் அவருக்கு யுத்தத்தை வெற்றி கொண்டதன் பரிசாக அமைச்சர் பதவி ஒன்றை வழங்க அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன் வந்ததார் எனவும் ஆனால் அதனை அவர் நிராகரித்தார் எனவும் அப்போது பேசப்பட்டது. அவர் அடைந்தால் ஜனாதிபதி பதவிதான் அடைவேன் என்ற நினைப்பில்தான் அப்போது அதனை நிராகரித்தாரா என்பது தெரியவில்லை.

ஆனால், அவரோ அப்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையை, தான் செயலாளராக இருந்த பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவருமாறு மாத்திரமே வேண்டுகோள் விடுத்தார். அதனையடுத்தே நகர அபிவிருத்தி அதிகாரசபை பாதுகாப்பு அமைச்சின்கீழ் கொண்டு வரப்பட்டது.

அவ்வாறு கொண்டுவரப்பட்ட பின்னர் கொழும்பு நகரத்தை தூய்மைப்படுத்தும் பணியை அவர் சிறப்பாக செய்து முடித்திருந்தார். கொழும்பை அழகுபடுத்தும் அவரது முயற்சியில், கொழும்பிலிருந்த குடிசைகளை எல்லாம் அகற்றி அங்கிருந்தவர்களுக்காக அடுக்குமாடி குடியிருப்புக்களை அமைத்துக்கொடுத்தார். அவர் தொடக்கி வைத்த அந்தத் திட்டத்தை பின்னர் நல்லாட்சி அரசில் அதன் அமைச்சராக இருந்த சம்பிக்க ரணவக்க தொடர்ந்து முன்னெடுத்து குடிசைகள் இல்லாத கொழும்பு நகரமாக மாற்றினார்.

அவ்வாறு அகற்றப்பட்ட குடிசைகளில் இருப்பவர்களிடமிருந்து மாதம் மூவாயிரம் ரூபா மாத்திரம் வாடகையாக அறிவிடப்பட்டு வந்தது. அந்த குடியிருப்புக்களை அங்கு குடியிருப்பவர்களுக்கே சொந்தமாக வழங்குவதற்கும் அவர் களிடமிருந்து எந்தவொரு பணத் தையும் பெறுவதில்லை என்றும் புதிய வரவு - செலவுத்திட்டத்தில் அறிவித்திருக்கிறார் ஜனாதிபதி. அந்த அறிவிப்பை செய்தபோது சபையிலிருந்த கொழும்பு மாவட்ட எம்.பி.யான மரிக்காரைப் பார்த்து “என்ன சந்தோசம்தானே?” என்று அவர் கேட்டபோது எதற்காக அப்பிடிக்கேட்டார் என்று இந்த ஊர்க்குருவிக்கு புரியவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி. என்பதால்தான் அவர் அப்படி கேட்டார் என்று நினைத்தபோதிலும் அது தொடர்பாக பேசிய தெற்கு நண்பர் ஒருவர் வேறு விளக்கம் தந்தார்.

குடிசைகளில் வாழ்ந்த அந்த மக்களுக்கு அந்த அடுக்குமாடி குடியிருப்பு மன மகிழ்வைத்தரவில்லை என்றும், விருப்பமின்றியே அங்கு வாழ்ந்த அவர்கள், இப்போது அந்த குடியிருப்புக்கள் அவர்களுக்கு சொந்தமானதும், அவற்றை அவர்கள் விற்றுவிட்டு மீண்டும் குடிசை வாழ்வுக்கு திரும்பிவிடுவார்கள் என்றும் கூறினார்.

அவ்வாறு அவர்கள் அவற்றை இரண்டு மூன்று மில்லியன்களுக்கு விற்கின்றபோது அவற்றை நிச்சயம் தமிழர்களோ சிங்களவர்களோ வாங்கப்போவதில்லை என்றும், அதனை முஸ்லிம்களே வாங்குவார்கள் என்பதால்தான் ஜனாதிபதி மரிக்காரைப் பார்த்து சந்தோசம் தானே என்று கேட்டார் என்கிறர் அந்த தெற்கு ஊடக நண்பர்.

என்ன கொழும்பில் பத்தாயிரம் முஸ்லிம் குடும்பங்கள் விரைவில் குடியேறவிருக்கிறார்கள் அவ்வளவு தான்.

-ஊர்க்குருவி.

# உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு இலவச நீரிழிவுப் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், நவ. 15

உலக நீரழிவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட நீரிழிவுக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையில் இலவச நீரிழிவுப் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.



நேற்று காலை ஆரம்பமான குறித்த நிகழ்வை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.ஜமுனானந்தா நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண நீரிழிவு சிகிச்சைப் பிரிவு சிறப்பு வைத்திய நிபுணர் ஆ.அரவிந்தன், ஏனைய வைத்திய நிபுணர்கள் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், நீரிழிவுக் கழக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ-03)

# பொய் பிரேரணைகளை முன்வைக்கவேண்டாம்!

## சபையில் கோரினார் சஜித்

கொழும்பு, நவ. 15

2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட 77 முன்மொழிவுகளில் 69 அரசாங்கத்தினால் இது வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டினார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

குறித்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தாது அடுத்த வருட வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவது குறித்த நம்பகத்தன்மையை எவ்வாறு உருவாக்குவது என அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் முன்னைய வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளை இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. கடந்த அரசாங்கத்தின் வரவு - செலவுத் திட்ட செயற்பாடுகளின் அடிப்படையிலே புதிய ஆண்டுக்காக அரசாங்கம் முன்வைக்கும் வரவு - செலவுத் திட்டத்தின் வெற்றியை எதிர்பார்க்கலாம். வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து பாராளுமன்றத்தில் அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அரசாங்கத்தின் பொறுப்பு முடிவடைவதில்லை. வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளை நிறைவேற்ற அரசாங்கம் மற்றும் அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும். 2024 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளில் நம்பிக்கை வைப்பதற்கு குறைந்த பட்சம் 2023 ஆம் ஆண்டுக்கான முன்மொழிவுகள் முழுமையடைந்திருக்க வேண்டும். ஆகவே, நாட்டுக்கு பொய் கூறாதீர்கள். நாட்டை தவறாக வழிநடத்தாதீர்கள். 2023 ஆண்டுக்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் மிகவும் பலவீனமான கொள்கைகள் பின்பற்றப்பட்டுள்ளது. அதேநேரம் வரவு - செலவுத் திட்டத்தில் பல திட்டங்களை முன்வைக்க வேண்டாம்- என்றார். (அ)

# பட்ஜெட் முன்மொழிவுகள் அதிருப்தியை தந்துள்ளன

## கூறுகிறார் ஜோசப் ஸ்டாலின்

கொழும்பு, நவ. 15

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டின் முன்மொழிவுகள் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்த பட்ஜெட்டில் கல்விக்கான எந்தவொரு குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பல்கலைக்கழகங்களை தனியாருக்கு வழங்கவே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குற்றஞ்சாட்டினார். (அ)

# 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பால் அரச ஊழியர்களுக்கு நன்மை இல்லை

## ஹரிணி அமரசூரிய சபையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 15

அரச சேவையாளர்களுக்கு வரவு -செலவுத் திட்டத்தில் வழங்கப்படும் 10 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பானது வரி செலுத்துதல் மற்றும் உணவை கொள்வனவு செய்வதற்கும் செலவிடப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

சம்பளத்தை அதிகரிப்பதன் மூலம் அரச சேவையாளர்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது என அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தொடர்ந்து உரையாற்றுகையில்-

புரட்சிக்காரர்கள் என ஆளும்கட்சி கூறுகிறது. விசித்திரக் கதைகளைத் தவிர புரட்சிகரமான எதுவும் இங்கு தெரியவில்லை. 2023 ஆம் ஆண்டு பல தசாப்த காலத் தவறுகளை சுட்டிக்காட்டி அவற்றை திருத்திக்கொள்ள வேண்டுமென கோரப்பட்டது. இது என்ன புதுமை என்பது புரியாத புதிராக உள்ளது. நாட்டின் நெருக்கடியை சமாளிப்பதற்கு என்ன புதிய முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகத் தெரியவில்லை. இருக்கும் வளங்களை விற்பது, வரி விதிப்பதை தவிர வரவு- செலவுத் திட்ட இடைவெளியை குறைப்பதற்கு வேறு எந்த முன்மொழிவு முன்வைக்கப்படவில்லை- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu
15.12.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 29

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# புத்தபெருமானை யுத்த பெருமானாக்கியவர்கள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழக்கத்துக்கு மாறாக ஒரு விடயத்தை நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டியிருக்கின்றார். புத்தபெருமானின் பொருளாதார தத்துவங்களை பொருட்படுத்தாமையினால்தான் – நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்கின்றது. நாடாளுமன்றத்தில் புதிய பாதீட்டை சமர்பித்து, உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருக்கின்றார். உரையின் ஆரம்பத்திலும் முடிவிலும் புத்தரின் போதனைகளை நினைவுபடுத்தியிருக்கின்றார்.

புத்தரின் போதனைகளில் ஒன்று, சமநிலையான வாழ்வு – அதாவது, ஒரு மனிதன் வரவுக்கு மீறி செலவு செய்யக்கூடாது, இருப்பதை கொண்டு வாழ்வை சிறப்பாக வாழவேண்டும். அதேபோன்று, நுகர்வுக்காக கடன்களை பெறக்கூடாது – மாறாக முதலீட்டுக்காகவே கடன்களை பெற வேண்டும் – அதிக வட்டிக்கு கடன்களை வாங்கி நுகர்வுக்கு செலவளித்தமையினால்தான் நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்கின்றது. நாம் புத்தபெருமானின் பொருளாதார தத்துவங்களை பொருட்படுத்தாமையினால்தான் இவ்வாறானதொரு நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கின்றோம். இதன்மூலம் முன்னைய ஆட்சியாளர்கள் புத்தரின் போதனைகளை முறையாக பின்பற்றவில்லை என்கிறார் ரணில்.

நாடு நெருக்கடி நிலையை எதிர்கொள்ளும்போது, மக்களை சமாளிக்கும், ஓர் உத்தியாக மக்களது நம்பிக்கைளில் உயர்வாக போற்றப்படும் விடயங்களை ஆட்சியாளர்கள் ஒரு கருவியாக கையாள்வதுண்டு. அந்த உத்தியைத்தான், ரணிலும் கையாள முயன்றிருக்கின்றார். இதன்மூலம் சிங்கள மக்களை ஆற்றுப்படுத்தவே அவர் முயல்கின்றார் – மாறாக தமிழ், முஸ்லிம் மக்களை அல்ல. ரணிலின் கூற்றுப்படி சிந்தித்தால், புத்தரின் போதனைகளை இந்த விடயத்தில் மட்டும்தானா, இலங்கையின் ஆட்சியாளர்கள் பின்பற்றவில்லை?

புத்தபெருமான் தமிழ்மக்களாலும் போற்றப்படும் ஒருவர். ஒரு காலத்தில் வடக்கு, கிழக்கில் வாழ்ந்த தமிழ் மக்கள் புத்தமதத்தை தங்களின் நம்பிக்கையாக பின்பற்றியிருக்கின்றனர். அந்த வழிபாட்டின் அடையாளங்கள்தான், வடக்கு கிழக்கிலுள்ள பிரதான புத்த விகாரைகள். ஆனால் அவற்றை சிங்களவர்களுக்குரியதாக அடையாளப்படுத்தி – அதனையும் தங்களின் அரசியல் நிகழ்ச்சிநிரலுக்காக ஆட்சியாளர்கள் பயன்படுத்துகின்றனர். இது புத்தபெருமானின் போதனைகளுக்கு உட்பட்டதா?

புத்தபெருமானின் தம்மபத போதனை கூறுகின்றது. வெறுப்பு, வெறுப்பையே பிரசவிக்கும் – அன்பே அன்பை பிரசவிக்கும். வெற்றி, வெறுப்பை வளர்க்கின்றது. தோற்கடிக்கப்பட்டவர்கள் துக்கத்தில் வாழ்கின்றார்கள். அமைதியானவர்கள் வெற்றி, தோல்வி இரண்டையும் கடந்து அமைதியாக வாழ்கின்றார்கள். பகையை நல்லிணக்கத்தாலும், தீமையை நன்மையாலும், கஞ்சத்தனத்தை தர்மத்தாலும், பொய்யை உண்மையாலும் வெல்லுங்கள் என்று, புத்தர் பெருமான் போதிக்கின்றார்.

புத்தபெருமான் மக்களின் நலனுக்கு பயனளிக்காத அரசியலை ஓர் அரசியலாகவே கருதவில்லை. ஓர் அரசாங்கமானது, சமூக ஒழுங்கையும், நலனையும் உறுதிப்படுத்துவதுடன், அது தர்மத்துடன் ஒத்துப் போவதாகவும் இருக்கவேண்டும் என்றார். புத்தத்தை தங்களின் அரசியல் கருவியாக்கியிருக்கும், இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள் இந்தப் போதனைகளை எப்போதாவது, எண்ணிப் பார்த்ததுண்டா?

சொந்த மக்களை தோற்கடித்ததை வெற்றியாக கொண்டாடுகின்றீர்கள். துயரத்தில் வாடும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏளனம் செய்கின்றீர்கள். ஆகக்குறைந்தது அரசியலமைப்பிலுள்ள ஏற்பாடுகளை கூட அமுல்படுத்தமாட்டோம் என்று அடம்பிடிக்கின்றீர்கள். துயரத்திலுள்ள மக்கள் தங்களின் உறவுகளை அமைதியாக நினைவு கொள்வதில் கூட, ஏகப்பட்ட தடைகளை ஏற்படுத்துகின்றீர்கள். இறுதியில் மகத்தான புத்த பெருமானை யுத்த பெருமானாக்கியிருக்கின்றீர்கள். அகிம்சையையும் ஒழுங்கையும் போதித்த ஒருவரின் பெயரால் தமிழ் மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்க முயல்கின்றீர்கள். தமிழ்மக்கள் புத்தத்தை வெறுக்கவில்லை – அவரது போதனைகளுக்கு மாறான செயல்பாடுகளையே எதிர்கின்றனர்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**

*"என் மனதில் ஆழப்பதிந்த காட்சிகளில் மனிதனின் கைபடாத ஆதிக் காடுகளைவிடச் சிறந்தது எதுவும் இல்லை."*

**- சார்ள்ஸ் டார்வின் (பரிணாமவியலின் தந்தை)**



# ஈஸ்டர் தாக்குதல் நட்ட ஈடாக மைத்திரி இதுவரை ரூ.15 மில்லியன் செலுத்தினார்!

*கொழும்பு, நவ. 15*

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான வழக்கில், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உள்ளிட்ட தரப்பினரால், இதுவரை 3 கோடியே 68 இலட்சத்து 25 ஆயிரத்து, 88 ரூபாய் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால 15 மில்லியன் ரூபாய் செலுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் காவிந்த ஜயவர்தன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவினால் விசாரணை நடத்தப்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரும் விசாரணை மேற்கொண்டு, சட்டமா அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

சட்டமா அதிபர் இவை தொடர்பாக ஆராய்ந்து, 42 குற்றப்பத்திரிகைகளை



கொழும்பு, உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

79 பேர் குற்றவாளிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளார்கள். சிலருக்கு நிபந்தனையுடன் பிணை வழங்கப்பட்டுள்ளது.

நீதிமன்றம் மற்றும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் சில அதிகாரிகள் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எனினும், இவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் நீதி அமைச்சுக்கு கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 மில்லியன் ரூபாய் நட்ட ஈடு வழங்கவேண்டும் என உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த தொகையில் 15 மில்லியன் ரூபாயை அவர் செலுத்தியுள்ளார்.

அதேநேரம், முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர 75 மில்லியன் ரூபாயும், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன 75 மில்லியன் ரூபாயும், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ 50 மில்லியன் ரூபாயும், பொலிஸ் அதிகாரி சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாயும் நட்டஈடு செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தது.

அத்தோடு, அரசாங்கம் 1 மில்லியன் ரூபாய் நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கமானது இந்தத் தொகையை செலுத்திவிட்டது.

ஹேமசிறி பெர்ணான்டோ 5 மில்லியன் ரூபாயும், சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாயையும், பூஜித் ஜயசுந்தர 10 இலட்சத்து 72 ஆயிரத்து 588 ரூபாயையும், நிலந்த ஜயவர்த்தன 4.1 மில்லியன் ரூபாயையும் இதுவரை செலுத்தியுள்ளனர்.

311 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என உயர்நீதிமன்றினால் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், இதுவரை 3 கோடியே 68 இலட்சத்து 25 ஆயிரத்து, 88 ரூபாய் நிதி இவர்களினால், நட்டஈட்டு அலுவலகத்திற்கு கிடைத்துள்ளது.

முழுமையான நிதி கிடைத்த பின்னர்தான், இதனை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கான திட்டமிடல் ஒன்றும் நஷ்ட ஈட்டு அலுவலகத்தினால் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது- என்றார்.

(அ)

# அந்தோனியார் ஆலயத்தில் சிலை திருடிய இருவர் கைது


*கொழும்பு, நவ. 15*

மொரட்டுமுல்லை புனித அந்தோனியார் ஆலயத்தில் சிலையொன்றை திருடிச்சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரும் மல்வானை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதோடு சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட காரும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வேறொரு தேவாலயத்தின் காரைப் பயன்படுத்தி கொள்ளையடிக்கும் காட்சிகள் அந்த பகுதியில் உள்ள சி.சி.ரி.வி. கமெராவில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். வியாபாரத்தில் வசூல் மந்தமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் வேலைச் சுமை அதிகரிக்கும்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் ஆதரிப்பார்கள். நிம்மதி உண்டாகும் நாள்.

**மிதுனம்**
எதிர்பாராத பணவ்ரவு உண்டு. பிள்ளைகளால் பெருமையடைவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். அமோகமான நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உங்கள் கைஓங்கும். உங்களை சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். அதிகாரிகளுக்குசில ஆலோசனைகள் தருவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**சிம்மம்**
பால்ய நண்பர்கள் தேடி வருவார்கள். பழைய கடனைத் தீர்க்கமுயற்சி செய்வீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**கன்னி**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கம்பீரம் பிறக்கும். பஉத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள்வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**துலாம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பயணங்கள் சிறப்பாக அமையும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உங்களுக்கு புது வாய்ப்புகள் அமையும். உற்சாகமான நாள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்து நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும் திட்டமிட்டு செயல்பட வேண்டியநாள்.

**தனுசு**
எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். குடும்பத்தை பற்றியகவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். புதிய பொறுப்புகள் கூடும். நிதானம் தேவைப்படும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் மனம் விட்டு பேசுவீர்கள். புதிய வாகனங்கள் வாங்குவீர்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். இனிமையான நாள்.

**கும்பம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன் பிறந்தோரும் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவு எடுப்பீர்கள். சிந்தனைத்திறன் பெருகும் நாள்.

**மீனம்**
உணர்ச்சிப் பூர்வமாகப் பேசிவிட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். மதிக்கப்படுவீர்கள். சாதிக்கும் நாள்.

**நீதிமன்றம் விடுதலை வழங்கி ஒரு வருடம்**

# ராஜீவ்காந்தி கொலையில் தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பேர் இன்னமும் திருச்சி சிறப்பு முகாமுக்குள்!

**சென்னை, நவ. 15**

**ராஜீவ்காந்தி படுகொலையில் தண்டனை விதிக்கப்பட்ட நால்வர் முன்கூட்டியே விடுதலையாகி ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ள போதிலும் அவர்கள் தொடர்ந்தும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.**

**இலங்கைக்கு அவர்களை நாடு கடத்துவதற்கான உத்தரவு தாமதமாவதன் காரணமாகவே அவர்கள் தொடர்ந்தும் திருச்சி சிறப்பு முகாமிலிருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.**

முருகன் சாந்தன் ஜெயக்குமார் ரொபேர்ட் பயஸ் ஆகிய நால்வரும் அவர்களை இலங்கைக்கு நாடு கடத்துவதற்கான உத்தரவு வெளிநாட்டவர்கள் பிராந்திய பதிவு அலுவலகத்திலிருந்து கிடைக்கும் வரை சிறப்பு முகாமில் தங்கவைக்கப்பட்டிருப்பார்கள் என முகாமிற்கான பொறுப்பதிகாரியும் மாவட்ட கலெக்டருமான எம் பிரதீப் குமார் கடந்த வருடம் ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வெளிநாட்டவர்கள் பிராந்திய பதிவு அலுவலகத்திலிருந்து இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எங்களிற்கு அனுமதி கிடைத்ததும் நாங்கள் அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என அவர் தெரிவித்துள்ளார்.

முருகன் சாந்தனிற்காக ஆஜரான சட்டத்தரணி புகழேந்தி இது குறித்து கருத்து தெரிவிக்கையில்-

அவர்கள் விடுதலையான பின்னரும் இன்னமும் திருச்சி முகாமில் இருக்கவேண்டியதற்கான விசேட காரணங்கள் எதுவுமில்லை என குறிப்பிட்டார்.

ஆயுள்தண்டனை விதிக்கப்பட்ட இலங்கையர்கள் சில மாதங்களிற்கு முன்னர் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் ஆனால் இவர்கள் விவகாரம் இன்னமும் தொடர்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான உத்தரவு தாமதமாவதை கண்டித்துள்ள தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தின் பொதுச்செயலாளர் தியாகு கடந்காலங்களில் வெளிநாட்டவர்கள் பிராந்திய பதிவு அலுவலகம் ஒரு நடைமுறை அமைப்பாக காணப்பட்டது ஆனால் தற்போது அது அரசியல்மயப்படுத்தப் பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

குற்றம்சாட்டப்பட்டவர்களை சட்டபூர்வமாக அவர்களின் நாடுகளிற்கு திருப்பி அனுப்பவேண்டும். ஆனால் தெரிவிக்கப்படாத காரணங்களுக்காக இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவது தாமதமாகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

முருகன் தனது மகளுடன் வசிப்பதற்காக லண்டன் செல்ல விரும்புகின்றார், சாந்தன் தனது தாயுடன் இலங்கையில் வசிக்க விரும்புகின்றார் ஏனைய இருவரும் நெதர்லாந்து செல்ல விரும்புகின்றார்கள் என தெரிவித்துள்ள புகழேந்தி, இந்த நால்வரும் பொலிஸாரின் 24 மணி நேர கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறினார்.

ஏன் அங்கு பொலிஸார் தேவை அவர்கள் சிறையில் அனுபவித்த கட்டுப்பாடுகளை விட சிறப்பு முகாமில் கடும் கட்டுப்பாடுகளை அனுபவிக்கின்றனர் எனவும் புகழேந்தி தெரிவித்துள்ளார்.

சிறப்பு முகாம் எங்கள் கட்டடத்தின் அருகில் உள்ளது. ஆயுதமேந்தி பொலிஸார் அதற்கு பாதுகாப்பு வழங்குகின்றனர். பொலிஸார் எங்கள் கட்டடத்திற்குள் அனுமதியின்றி நுழைகின்றனர். முகாமின் சுவருக்கு அருகில் ஆறு பொலிஸார் பாதுகாப்புப் பணியில் வழமையாக ஈடுபடுகின்றனர். அவர்கள் எங்கள் கட்டடத்திற்குள் நுழைவதற்கு அனுமதியில்லை. துப்பாக்கி தவறுதலாக வெடிக்கலாம் என நாங்கள் அச்சமடைகின்றோம் என திருச்சி சிறைத்துறை பயிற்சி பள்ளியின் துணைமுதல்வர் ஜே.மோகன் குமார் தெரிவிக்கின்றார். (அ)

# போதையின் ஆதிக்கம் நீடிக்கும்வரை தமிழக மக்களுக்கு விடியல் கிட்டாது

## ராமதாஸ் சாடல்



*சென்னை, நவ. 15*

தீபாவளி திருநாளில், போதையின் ஆதிக்கம் காரணமாக 20 உயிர்கள் பலியாகியிருப்பதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. சென்னையில் நடந்த விபத்து உள்ளிட்ட பல நிகழ்வுகளுக்கு மது மற்றும் கஞ்சா போதை தான் காரணம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதே நிலை நீடிக்கும் வரை தமிழக மக்களுக்கு எந்த விடியலும் கிடைக்காது” என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக தனது எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்-

தமிழகத்தில் தீபாவளி திருநாளில் மட்டும் சென்னையில் கட்டுப்பாடின்றி ஓடிய கார் மோதியதால் இருவர், சத்திய மங்கலத்தில் மரத்தில் கார் மோதி நால்வர் உள்பட குடிபோதையால் நிகழ்ந்த விபத்துகள் மற்றும் கொலைகளில் 20 பேர் உயிரிழந்திருப்பதாக காவல்துறையினரை மேற்கோள்காட்டி வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியும், வேதனையும் அளிக்கின்றன. உயிரிழந்த அனைவரின் குடும்பங்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மகிழ்ச்சியாக கொண்டாடப்பட வேண்டிய தீபாவளி திருநாளில், போதையின் ஆதிக்கம் காரணமாக 20 உயிர்கள் பலியாகியிருப்பதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. சென்னையில் நடந்த விபத்து உள்ளிட்ட பல நிகழ்வுகளுக்கு மது மற்றும் கஞ்சா போதை தான் காரணம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.
உயிர்க்கொல்லி மதுவையும், கஞ்சாவையும் ஒழிக்க வேண்டும் என்பதற்கு இதை விட வலிமையான காரணங்கள் இருக்க முடியாது.

மற்றொருபுறம், தீபாவளி திருநாள் மற்றும் அதற்கு முந்தைய இரு நாள்களில் மட்டும் தமிழகத்தில் ரூ.633 கோடிக்கு மது விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. இது கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின்படி கடந்த 10-ஆம் நாள் வழங்கப்பட்ட 1138 கோடியில் பாதிக்கும் அதிகமாகும். மகளிர் உரிமை, வாழ்வாதாரம், நிதி உதவி, குடும்ப உதவி என பல்வேறு பெயர்களில் மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டாலும் கூட, அதில் பெரும் பகுதி மது வணிகம் என்ற பெயரில் அரசுக்கே திரும்ப வரும் அவலம் தான் காலம் காலமாக நடந்து கொண்டிருக்கிறது. இதே நிலை நீடிக்கும் வரை தமிழக மக்களுக்கு எந்த விடியலும் கிடைக்காது.-என்றார்.

(அ)

# 2024 வரவு-செலவுத் திட்டம் அரசுக்கு தெய்வீக உலகம் மக்களுக்கு நரகம்!

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 15

**ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வரவு செலவுத் திட்டம் ஆட்சியாளர்களுக்கு தெய்வீக உலகத்தையும் மக்களுக்கு நரகத்தையும் காட்டியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணையை பெற்றுக்கொள்ள முடியாத காரணத்தினால் ஜனாதிபதி சில்லறை வரவு-செலவுத் திட்டத்தை முன் வைத்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

ஜனாதிபதியின் வரவு-செலவுத்திட்ட உரையின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இந்த வருட வரவு -செலவுத் திட்டம் நாட்டு மக்களை ஏமாற்றும் நடவடிக்கை என்றும் குற்றம் சாட்டினார்.

இந்த வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக மக்களின் வாழ்வாதாரத்தை பலப்படுத்தும் வேலைத் திட்டம் பற்றி பேசுவதற்கு முன்



னர் 2022 வரவு-செலவுத் திட்ட பிரேரணையின் உள்ளடக்கங்கள் எந்தளவுக்கு நிறைவேற்றப் பட்டுள்ளது என்பதை ஆராய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)



# இந்திய மீனவர்களுக்கு புத்தாடை!

யாழ்ப்பாணம், நவ. 15

தீபாவளி தினத்தை முன்னிட்டு யாழ் சிறைச்சாலையில் உள்ள இந்திய மீனவர்களுக்கு, இந்திய துணைத் தூதரக அதிகாரிகளால் இனிப்புகள், புதிய ஆடைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் என்பன வழங்கப் பட்டன.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வவுனியா-மன்னார் பிரதான வீதியில் மரம் முறிந்து போக்குவரத்து பாதிப்பு

வவுனியா, நவ. 15

வவுனியா - மன்னார் பிரதான வீதியின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை மரம் முறிந்து வீழ்ந்தமையினால் இந்த பாதிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக நிலவி வரும் சீரற்ற வானிலையினால் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது.

இதன் காரணமாக வவுனியா - மன்னார் பிரதான வீதி வேப்பங்குளம் பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்தமையினால் அப்பகுதியூடான போக்குவரத்து பகுதியளவில் பாதிப்படைந்தது.

அதன் பின்னர் சில மணித்தியாலங்களின் பின்னர் பொது மக்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினரின் உதவியுடன் மரம் அகற்றப்பட்டமை யினையடுத்து போக்குவரத்து வழமைக்கு திரும்பியது. (அ)

# வரித்திருத்தம் வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்பாக வெளியீடு

கொழும்பு, நவ. 15

அடுத்த ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில், அரசாங்கத்தின் செலவின முன்மொழிவுகளை ஜனாதிபதி தெளிவுபடுத்தியபோதிலும், அதற்கான வருமானத்தை ஈட்டும் யோசனைகள் தொடர்பில் அவர் விளக்கமளிக்கவில்லை.

வரவு-செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வரித் திருத்தங்கள் வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்பாக வெளியிடப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டுக்கான வரவு -செலவு திட்டத்தில் தமது வருமானத்தின் மீது தற்போது சுமத்தப்பட்டுள்ள அதிக வரிச்சுமைக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்பதே தொழில் வல்லுநர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகவிருந்தது.

தற்போது, மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் வருமானம் ஈட்டும் ஒருவர், பல்வேறு வருமான வகைகளின் கீழ் 6 வீதம் முதல் 36 வீதம் வரை வரி செலுத்துகின்றார்.

இவ்வாறு வரி செலுத்துபவர்கள், நாட்டின் மொத்த சனத்தொகையில் 20 வீதமானவர்கள் என ஜனாதிபதி சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை ஆரம்பித்து ஒரு வருடத்திற்குள், அதிக வருமானம் ஈட்டுபவர்களில் 20 வீதமானோரின் வரிகளை குறைக்குமாறு நிதியத்திடம் அல்லது கடன் வழங்குனர்களிடம் கோருவதில் இலங்கை அதிகாரிகளுக்கு சிக்கல் இருப்பதாக வரவு-செலவுத் திட்ட ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், வரவு-செலவுத் திட்டத்தின் இணைப்பில் பல வரித் திருத்தங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

இதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, வரி தொடர்பான தகவல்களை சமர்ப்பிக்காதவர்கள் மீது வழக்குத் தொடர விசேட தண்டனை ஏற்பாடு அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதனிடையே, வங்கியொன்றில் நடைமுறை கணக்கொன்றை ஆரம்பித்தல், கட்டட வரைபடத்திட்டத்தை அங்கீகரித்தல், மோட்டார் வாகனமொன்றை பதிவு செய்தல், காணியை அல்லது காணி உறுதிப்பத்திரத்தை பதிவு செய்யும் சந்தர்ப்பங்களிலும் வரி செலுத்துபவரை அடையாளம் காண்பதற்கும் யோசனை முன்மொழியப்பட்டுள்ளது.

பெறுமதிசேர் வரி திருத்தங்கள் தொடர்பாக வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், விலைப் பட்டியல் படிவங்களை ஆணையாளர் நாயகத்தினூடாக வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கலால் வரி தொடர்பில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என வரவு-செலவுத் திட்ட இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் கீழ், ஒன்லைன் உரிமம் வழங்கும் முறையை அறிமுகப்படுத்துதல், போலி அல்லது மோசடி ஸ்டிக்கர்கள் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண ஒரு குழுவை நியமித்தல், புதிய கலால் அனுமதி முறையை அறிமுகப்படுத்துதல், தயாரிப்பு மொத்த, சில்லறை உரிமங்களுக்கு தனியான நிபந்தனைகளை அறிமுகப்படுத்துதல், மதுபான நிலையங்களை திறக்கும் விடயத்தில் திருத்தம் மேற்கொள்ளுதல், சுற்றுலா தொடர்பான விதிமுறைகளில் திருத்தங்கள் என்பன இதில் அடங்குகின்றன.

இதேவேளை, கலால் வரி திணைக்களம் சில மாற்று யோசனைகளையும் முன்வைக்கவுள்ளது.

இதன் கீழ், உள்ளூர் - வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்டு, அனைத்து வகையான உள்ளூர் மதுபானங்களுக்கும் தரநிலைகளை அறிமுகப்படுத்துதல், தற்போதுள்ள கேள்விக்கு ஏற்றவாறு கலால் அனுமதி கட்டணத்தை அதிகரித்தல், வெளிநாட்டு சந்தைகளை இலக்காகக் கொண்ட புதிய மதுபான தயாரிப்புகளில் முதலீட்டை ஊக்குவித்தல், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தெரிவு செய்யப்பட்ட மதுபானங்களை தீர்வை வரியற்ற கடைகளில் விற்பனை செய்ய அனுமதித்தல் என்பன இதன் கீழ் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சுங்கத் திணைக்களத்தின் செயற்பாட்டுத் திறனை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் முன்மொழியப் பட்டுள்ளது. (அ)

# இயந்திர கோளாறினால் ரயில் சேவைகள் பாதிப்பு

ශ්‍රී ලංකා දුම්රිය දෙපාර්තමේන්තුව
Sri Lanka Railway Department

கொழும்பு, நவ. 15

நாட்டில் நேற்று காலை முதல் இயந்திரக் கோளாறு காரணமாக பல ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்று காலை களுத்துறையில் இருந்து கொழும்பு கோட்டை வரை பயணிக்கவிருந்த ரயில் ரத்து செய்யப்பட்டதாக ரயில்வே திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன், இயந்திரக் கோளாறு காரணமாக சிலாபத்தில் இருந்து பாணந்துறை வரை பயணிக்கும் ரயில் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட் டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து நேற்று காலை 6.40 மணிக்கு பெலியத்தை நோக்கி புறப்படவிருந்த ரயில் சேவையும் தாமதமடைந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# மன்னாரில் கன மழை!

மன்னார், நவ. 15

தென் மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றமுத்த தாக்கம் காரணமாக இலங்கை முழுவதும் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது.

அந்தவகையில் கடந்த சில நாட்களாகப் பெய்துவரும் கன மழை காரணமாக மன்னார் மாவட்டம் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளது.

குறிப்பாக தாழ்நில கிராமங்கள் பல நீரில் மூழ்கியுள்ளதால் மக்கள் வீட்டை விட்டு வெளியே செல்லமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன் வீதிகளிலும் வெள்ள நீர் தேங்கிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொடர்ச்சியாக மழையுடன் கூடிய கால நிலை நீடிக்கும் பட்சத்தில் தாழ் நில கிராம மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்சாரம் தாக்கி ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 15

பொல்பித்திகம - மகுல்பொத பிரதேசத்தில் மின்சாரம் தாக்கி நபர் ஒருவர் நேற்று முன் தினம் காலை உயிரிழந்துள்ளதாக பொல்பித்திகம பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் பொல்பித்திகம, மகுல்பொத பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடையவர் ஆவார்.

இவர் மின்சாரத்தால் தாக்கப்பட்ட நிலையில் பொல்பித்திகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தனது பண்ணையில் காட்டு மிருகங்களால் ஏற்படும் சேதங்களைக் கட்டுப்படுத்துவதற்காக பொருத்தப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்கியே உயிரிழந்துள்ளதாக பொல்பிதிகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்பிதிகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நீரிழிவு நோயாளர்கள் எண்ணிக்கை வடக்கில் அண்மைக்காலமாக உயர்வு

## சிறப்பு மருத்துவ நிபுணர் ஆ. அரவிந்தன் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், நவ. 15**

**"வட மாகாணத்தில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையானது மிக அண்மைக் காலங்களில் அதிகரித்துச் செல்வதானது ஓர் அபாய அறிகுறி."**

**- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு, அகஞ்சுரக்கும் தொகுதி சிறப்பு மருத்துவ நிபுணர் ஆ. அரவிந்தன்.**

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-

உலகளாவிய ரீதியில் நவம்பர் 14ஆம் திகதியானது நீரிழிவு தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. நீரிழிவு நோயின் தாக்கமானது சிறிது சிறிதாக அதிகரித்துச் செல்வதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. இலங்கை போன்ற தெற்காசிய நாடுகளில் நீரிழிவு நோயாளர்களின் எண்ணிக்கையாகது அதிகரித்துச் செல்வதை அண்மைய தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

வட மாகாணத்தில் குறிப்பாக யாழ் மாவட்டத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையானது மிக அண்மைக் காலங்களில் அதிகரித்துச் செல்வதானது ஒரு அபாய அறிகுறியென்றே கூறலாம்.

தவறான உணவுப் பழக்கவழக்கங்கள், அப்பியாசமற்ற வாழ்க்கை முறை, மன அழுத்தம் மற்றும் தவறான பழக்க வழக்கங்கள் ஆகியன இதற்கான பிரதானமான காரணங்களாகும்.

யாழ். மாவட்டத்தில் ஏறக்குறைய 20 சதவீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலா மென்பதை தரவுகள் சுட்டிக் காட்டுகின்றன.

நீரிழிவு நோயானது ஒருவருக்கு இருக்கின்றதா இல்லையா என்பதை இரத்தப் பரிசோதனை மூலம் இலகுவாக இறிந்து கொள்ள முடியும். நீரிழிவு நோயை ஆரம்பத்திலேயே இனங்கண்டு கொள்வதன் மூலம் அதனால் ஏற்படுகின்ற நீண்டகாலப் பாதிப்புகளைக் குறைக்கவோ தவிர்க்கவோ கூடியதாக இருக்கும்.

இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் மாத்திரமல்லாது பாடசாலை சிறுவர்கள் மத்தியிலும் நீரிழிவு நோயிக் தாக்கமாகது அதிகரித்துச் செல்கின்றது. அதே போல கர்ப்ப கால நீரிழிவு நோயினால் பாதிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது.

எனவே, இன்றைய நீரிழிவு தினத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து நீரிழிவு நோயின் பிடியிலிருந்து எமது மக்களைக் குறிப்பாக இளைய தலைமுறையினரைக் காப்பாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் -என்றார். (அ)

# ஈரானியப் பெண் கைது!

கொழும்பு, நவ. 15

போலியான ஆஸ்திரிய நாட்டு கடவுச்சீட்டுடன் இலங்கைக்குள் பிரவேசித்த ஈரானிய பெண் ஒருவர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை பிற்பகல் அதே கடவுச்சீட்டுடன் நாட்டை விட்டு வெளியேற முற்பட்ட போது குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

53 வயதான குறித்த பெண் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இந்தியன் எயார்லைன்ஸ் விமானத்தில் ஏறவிருந்தபோது கைது செய்யப்பட்டதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

குறித்த பெண் இலங்கைக்குள் பிரவேசிக்க பயன்படுத்திய ஆஸ்திரிய நாட்டு கடவுச்சீட்டு போலியானது என வருகை முனையத்தில் உள்ள கணினி அமைப்பினர் கண்டறிந்துள்ள நிலையில், அவரது வருகையின் நோக்கத்தை அறிந்து கொள்வதற்காக அதிகாரிகள் அவரை நாட்டுக்குள் செல்ல அனுமதித்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 8ஆம் திகதி நாட்டுக்கு வருகை தந்த குறித்த பெண், தனது கடவுச்சீட்டில் கொழும்பில் இருந்து பெறப்பட்ட இந்திய விஸாவை போன்ற மற்றுமொரு விஸா வில் நேற்று முன் தினம் இந்தியா செல்ல முயற்சித்துள்ள நிலையில் கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை விமான நிலைய அதிகாரிகள் மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்துள்ளனர். (அ)

# கல்வி அலுவலகத்தின் கழிவறையில் சடலம்!

## கம்பளையில் பரபரப்பு

கொழும்பு, நவ. 15

கம்பளை கல்வி அலுவலகத்தின் கழிவறையில் இருந்து சடலமொன்று நேற்று முன் தினம் மாலை கண்டெடுக்கப்பட்டது.

கம்பளை கல்வி அலுவலகத்தில் பல்பணி உதவியாளராக கடமையாற்றிய ரத்மல்கடுவ பிரதேசத்தைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான உடன் துன்புறுத்தலை நிறுத்துங்கள்!

## சர்வதேச ஊடக அமைப்பு அரசுக்கு அழுத்தம்

கொழும்பு, நவ. 15

இலங்கையில் பணியாற்றும் தமிழ் ஊடகவியலாளர்கள் அரச அடக்குமுறையில் இருந்து விடுபட்டும் அச்சமின்றியும் செயலாற்ற அனுமதிக்கப்பட வேண்டும் என, அமெரிக்காவில் செயற்படும் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு அமைப்பு (சி.பி.ஜே) அரசிடம் வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து குறித்த அமைப்பின் ஆசிய நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பாளர் பெஹ் லி யீ கருத்துத் தெரிவிக்கையில்-

இலங்கை அதிகாரிகள் உடனடியாக தமிழ் ஊடகவியலாளர்களான சசிகரன் புண்ணிய மூர்த்தி மற்றும் பாலசிங்கம் கிருஷ்ணகுமார் ஆகியோர் மீதான அனைத்து அடக்குமுறைகளையும் கைவிட்டு, அவர்கள் சுதந்திரமாக செய்தி சேகரிப்பில் ஈடுபடுவதை உறுதி செய்யவேண்டும்.

அத்துடன் மனித உரிமைகள் விடயங்கள் தொடர்பிலும் அது மீறப்படும் போது தமது சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பிலும் செய்திகளை சேகரித்து வெளியிட்டு வரும் தமிழ் செய்தியாளர்களை இலக்கு வைத்து தொடர்ச்சியாக துன்புறுத்தும் அரசின் நீண்டகால நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# கொழும்பில் உள்ள பல வீதிகளில் இரு புறமும் காத்திருக்கும் ஆபத்து

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 15

கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளின் இருபுறமும் உள்ள சுமார் 300 மரங்கள் ஆபத்தான நிலையில் இருப்பதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக 15 மாவட்டங்களின் 158 பிரதேச செயலகப் பிரிவுகளில் 9 ஆயிரத்து 280 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 348 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத்



தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 550 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 951 பேர் நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள 29 பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வங்காள விரிகுடாவின் தென்மேற்குப் பிராந்தியத்தில் தாழ் அமுக்கப் பிரதேசம் ஒன்று உருவாகியுள்ளதன் காரணமாக நாட்டிற்கு மேலாக வளிமண்டலத்தின் கீழ் மட்டத்தில் தளம்பல் நிலையானது தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளதாக சிரேஷ்ட வானிலை அதிகாரி மொஹமட் சாலிஹீன் கூறினார். (அ)

# நியாயமான பட்ஜெட் இது!



## பாராட்டுகிறார் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, நவ. 15

நிதியமைச்சராக ரணில் விக்கிரமசிங்க கடினமான காலப்பகுதியில் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் நியாயமான வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது அமைப்பை மாற்றும் வரவு செலவுத் திட்டமே தவிர எளிய, மலிவு, விசித்திரக் கதைகளை உள்ளடக்கிய வரவு செலவுத் திட்டம் அல்ல என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வலியுறுத்தினார்.

வரவு-செலவுத் திட்டத்தை விமர்சித்து எதிர்க்கட்சிகள் பாரம்பரிய அரசியலில் ஈடுபட்டாலும், நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை மக்கள் உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

பத்தரமுல்லை, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் இந்த வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட வேண்டும். அந்த மனோபாவத்தின் அடிப்படையில்தான் இந்த ஆண்டுக்கான பட்ஜெட் தயாரிக்கப்பட்டது.

இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு, ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரகக் கோளாறு உள்ளவர்களின் கொடுப்பனவு 5000 ரூபாவிலிருந்து 7500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

விதவைகள் மற்றும் ஆதரவற்றோரின் ஓய்வூதியத்தை உயர்த்துதல், அரசு ஊழியர்களுக்கு பேரிடர் கடன் வசதி மீண்டும் வழங்குதல், நாட்டிற்கு நான்கு புதிய பல்கலைக்கழகங்கள் நிறுவுதல், தேசிய கல்விப் பல்கலைக்கழகம் நிறுவுதல், புதிய தொழில்நுட்ப பல்கலைக்கழகம் வழங்குதல், தற்போது நிறுத்தப்பட்டுள்ள திட்டங்களுக்கு ஐயாயிரத்து ஐநூறு கோடி ரூபாய் ஒதுக்கீடு போன்ற சாதகமான முன்மொழிவுகள் உள்ளன.

இந்த பட்ஜெட்டில் எனது அமைச்சு "சூப்பர் ஸ்டார்" ஆகிவிட்டது. ஏனெனில் பல்வேறு நகர்ப்புற திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் மூவாயிரம் ரூபாய் வாடகை அடிப்படையில் இருந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாடகை நிறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி ஐம்பதாயிரம் குடும்பங்களுக்கு வீட்டு உரிமை கிடைக்கும். இந்த பட்ஜெட் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சிறந்த முன்மொழிவுகளில் இதுவும் ஒன்றாகும். குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு இந்த திட்டம் கொண்டு வரும் நிவாரணம் பற்றி சொல்ல வார்த்தைகள் இல்லை-என்றார். (அ)

# நீண்ட காலத் தீர்வை நோக்கமாக கொண்டது வரவு-செலவுத்திட்டம்!

## ரஞ்சித் சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 15

**2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் இலங்கையை நீண்ட கால அடிப்படையில் முன்னோக்கிக் கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டது என நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.**

மேலும் குறுகிய காலத்தில் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது குறித்தும் கவனம் செலுத்தப்படும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

நீண்ட கால ஸ்திரத்தன்மைக் காகவே இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றபோது விடுத்த பிரகடனத்தின் அடிப்படையில் நாடு மீண்டும் பொருளாதார வீழ்ச்சியை சந்திக்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.



நிவாரணம் தேவைப்படும் மக்களுக்கும், வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்றும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

(அ)

# வரவு-செலவுத் திட்டம் குறித்து கருத்து கூற மறுத்தார் மஹிந்த!

கொழும்பு, நவ. 15

2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் தொடர்பில் கருத்துக்கூற முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ மறுத்து விட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவிடம் ஊடகவியலார்கள் கருத்து கேட்ட போதே உடனடியாக எப்படிக் கருத்துக்கூறுவது எனக் கூறி மறுத்து விட்டார்.

இருந்தபோதும் ஊடகவியலாளர்கள் அவரிடம் தொடர்ந்து கேட்டபோது,

நான் வரவு-செலவுத்திட்ட அறிக்கையை முழுமையாக இன்னும் படிக்கவில்லை. அதனால் உடனடியாக என்னிடம் கேட்டால் நான் எப்படி கருத்துக் கூற முடியும்? இது தொடர்பாக நன்கு அறிந்தவர்களிடம் கேளுங்கள். நான் படித்த பின்னர் கூறுகின்றேன்.

அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச்செலவு அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இது நல்ல விடயம்-என்றார்.

(அ)

# 2025 வரவு-செலவுத் திட்டத்திலும் இதே முன்மொழிவுகள்தான் வரும்

## எந்தப் பயனும் இல்லை என்கிறார் சிறிதரன்

கொழும்பு, நவ. 15

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நிலவும் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு 2024 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை காட்டிலும் பல முன்மொழிவுகள் கடந்த காலங்களிலும் முன்வைக்கப்பட்டன. ஆனால் எவையும் செயற்படுத்தப்படவில்லை. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளை 2025 ஆம் ஆண்டும் முன்வைப்பார்கள்.எதனையும் செயற்படுத்த மாட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும், நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே சிறிதரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வழமையான அறிக்கையாகவே 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஜனாதிபதியால் சபையில் வாசிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு மற்றும் இந்த ஆண்டு முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இந்த முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன.குறிப்பிட்ட முன்மொழிவுகள் ஏதும் செயற்படுத்தப்படவில்லை.

நாட்டு மக்கள் பொருளாதார பாதிப்பால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.வரவு-செலவுத் திட்டத்தில் வரி அதிகரிப்பதும்,சொற்ப அளவில் சம்பளம் அதிகரிப்பதாலும் பிரச்னைக்கு தீர்வு காண முடியாது. எதிர்காலத்தின் மீது நம்பிக்கை கொள்ளும் வகையில் வரவு-செலவுத் திட்டம் அமையவில்லை.

வருடாந்தம் சமர்ப்பிக்கப்படும் சம்பிரதாயபூர்வமான வரவு செலவுத் திட்டமாகவே 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதை விடுத்து இறந்த காலத்தை அடியொற்றியதாக சகல முன்மொழிவுகளும் காணப்படுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு தற்போது முன்வைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை காட்டிலும் பல முன்மொழிவுகள் கடந்த காலங்களிலும் முன்வைக்கப்பட்டன.

ஆனால் எவையும் செயற்படுத்தப்படவில்லை. 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகளை 2025 ஆம் ஆண்டும் முன்வைப்பார்கள். எதனையும் செயற்படுத்தமாட்டார்கள்-என்றார்.

# பட்ஜெட்டில் முன்வைக்கப்பட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்தமுடியுமா என்பது சந்தேகம்!

## சுட்டிக்காட்டுகின்றார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, நவ. 15

வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி பல யோசனைகளை முன்வைத்துள்ள நிலையில் அதனை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதே எமது கேள்வியாக உள்ளது என முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தை ஜனாதிபதி முன்வைத்து உரையாற்றியதை யடுத்து அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த வருடம் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட யோசனைகளில் 90 வீதமானவை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை நாம் அறிவோம்.

அதேபோன்று அரசாங்கத்தினால் தொடர்ந்தும் தெரிவிக்கப்பட்டு வரும் கடன் மறுசீரமைப்பு இன்னும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை.

அதனை நடைமுறைப்படுத்தாமல் வேறு எதையும் முன்னெடுக்க முடியாது.



வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக ஜனாதிபதி சிறந்த விடயங்களை பாராளுமன்றத்தில் முன்வைத்தார். எனினும் அரசாங்கத்தினால் அதனை நடைமுறைப்படுத்த முடியுமா? என்பதே கேள்வியாக உள்ளது-என்றார்.

(அ)

# வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகள் நாட்டு மக்களை ஏமாற்றும் செயற்பாடு

## மக்கள் விடுதலை முன்னணி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 15

நாட்டு மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயற்பாடாகவே 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் காணப்படுகிறது. நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வினை பெற்றுக்கொடுக்கும் எவ்வித பரிந்துரைகளும் முன்வைக்கப்படவில்லை.

இருக்கும் பல்கலைக்கழகங்களில் பிரச்னைகளுக்கு தீர்வு காணாமல் புதிதாக நான்கு பல்கலைக்கழகங்களை அமைப்பதாக குறிப்பிடுவது நகைப்புக்குரியது என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதியும், நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தவறுகளை திருத்திக் கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட சமர்ப்பின் போது இந்த கருத்தையே குறிப்பிட்டார். ஆனால் எந்த தவறும் திருத்திக் கொள்ளப்படவில்லை.

நாட்டு மக்களை ஏமாற்றும் பிறிதொரு செயற்பாடாகவே இந்த வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு முன்வைக்கப்படவில்லை. வரி அதிகரிப்பு,தேசிய வளங்களை விற்றல் என்பதை அரச கொள்கையாக முன்வைக்கப்பட்டுள்ளன.

வரையறையற்ற கடன்களினால் நாடு வங்குரோத்து நிலையடைந்தது என்று ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.ஆனால் கடன்படு எல்லையை 3400 பில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளார். ஆகவே இந்த வரவு-செலவுத் திட்டம் நடைமுறைக்கு ஒருபோதும் சாத்தியமடையாது.

நாட்டில் 17 அரச பல்கலைக்கழகங்கள் உள்ளன. இவற்றில் காணப்படும் பிரச்னைகளுக்கு தீர்வு முன்வைக்கப்படவில்லை. மாறாக புதிதாக 4 பல்கலைக்க ழகங்களையும்,தனியார் பல்கலைக்கழகங்களையும் உருவாக்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுகிறார்.இது நகைப்புக்குரியது.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் என்பதை ஜனாதிபதி தனது முன்மொழிவுகள் ஊடாக குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது-என்றார்.

(அ)

# ஓட்டுமடம் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டுமடம் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்று முன் தினம் இரவு பெற்றோல் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



இரு குடும்பத்தினரிடையே ஏற்பட்ட முரண்பாடே குறித்த தாக்குதல் சம்பவத்துக்கு காரணமென முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# சீயோன் தேவாலயத்துக்கு சென்றபோது எனக்கு கடும் மன உளைச்சல் ஏற்பட்டது

## மட்டக்களப்பு சென்ற அமெ.தூதுவர் ஜூலி சங்





கொழும்பு, நவ. 15

**2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞயிறு தாக்குதலின்போது பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்துக்கு சென்றபோது தனக்கு கடும் மன உளைச்சல் ஏற்பட்டதாக அமெ ரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குள்ளான மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்துக்கு அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் விஜயமொன்றை மேற்கொண்டார்.**

**விஜயம் குறித்து அமெரிக்கத் தூதுவர் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிடுகையில்-**



சீயோன் தேவாலயத்துக்குச் சென்று, 2019 இல் இடம்பெற்ற அந்த பயங்கரமான நாளின் தாக்கம் குறித்து போதகர் ரோஷன் மகேசனுடன் கலந்துரையாடியதில் எனக்கு கடுமையான மன உளைச்சல் ஏற்பட்டது. இங்கு கொல்லப்பட்ட 25 இற்கும் மேற்பட்ட குழந்தைகளால் சமூகம் மேம்படுவதற்கான ஒரு குணப்படுத்தும் ஆதரவைப் பெற்றுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு குழு உறுப்பினர்களை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

மட்டக்களப்பு பிரதேசத்தில் நிலவும் நிலப்பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும் சமூக ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதில் தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்புக் குழு உறுப்பினர்களின் ஒருங்கிணைந்த பங்கு குறித்து பாராட்டுதல்களை தெரிவித்துள்ளார்.

சமூகங்களுக்கிடையில் இனவாத பதற்றங்களை தணிப்பதில் அவர்கள் பகிர்ந்துகொண்ட விடயங்கள் இலங்கையின் வெற்றி மற்றும் பன்முகத்தன்மைக்கு முக்கிய சான்றாகும் என தூதுவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நிறுவப்பட்டுள்ள யேசு சபையைச் சேர்ந்தவரும் இலங்கை கூடைப்பந்தாட்டத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவருமான அமெரிக்காவில் பிறந்த யூஜின் ஜோன் ஹெபர்ட்டின் சிலையை அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் பார்வையிட்டார்.

கடந்த 1948 ஆம் ஆண்டில் அமெரிக்காவிலிருந்து இலங்கை வந்த யேசு பையைச் சேர்ந்த யூஜின் ஜோன் ஹெபர்ட், மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரி கூடைப்பந்தாட்ட அணியை தேசிய சாம்பியனாக வழிநடத்தினார். அப்போதும் அருட்தந்தை யூஜின் ஜோன் ஹெபர்ட், கூடைப்பந்து விளையாட்டை சமூகங்களை இணைக்கவும் புரிந்துணர்வை வளர்க்கவும் ஒரு இராஜதந்திர கருவியாகப் பயன்படுத்தினார் என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் அமெரிக்காவின் 75 வருட கூட்டாண்மை இலங்கையர்களுக்கு எவ்வாறான வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது என்பதை ஆராய்வதற்காக அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்குள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் பிரகாசமான எதிர்காலத்தை உறுதி செய்வதற்கும் அதில் இருந்து படிப்பினைகளை கற்றுக்கொள்வதற்கும், முன்னேறுவதற்கும், ஒன்றாக இணைந்து செயல்படுவதற்கும் காணப்படும் வாய்ப்புகளை மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் உள்ள இலங்கையர்களிடம் இருந்து இனங்கண்டு பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுடன் ஒன்று சேர்ந்து ஈடுபட ஆவலுடன் காத்திருப்பதாகவும் அமெரிக்கத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# சிறுவர்கள் சித்திரப் போட்டியில் கிழக்கு மாகாணத்தில் முதலிடம்



காரைதீவு, நவ. 15

2023 நடைபெற்ற அகில இலங்கை சிறுவர் சித்திரப் போட்டியில் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனைக்கு உட்பட இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியில் ஆறாம் தரத்தில் கல்வி பயிலும் அப்துல் முனாப் பாத்திமா நுஸைபா கிழக்கு மாகாண மட்டபோட்டியில் பங்கு பற்றி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இதன் மூலமாக இவர் தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளார். (அ)

# பல் சமய சிறுவர் கழகம் வாழைச்சேனையில் திறப்பு



மட்டக்களப்பு, நவ. 15

சிறுவர்களின் ஆளுமை விருத்தி மற்றும் உடல், உள, ஆரோக்கியத்தை வலுப்படுத்தும் நோக்கில் வாழைச்சேனை, யூனியன் கொலணியில் பல் சமய சிறுவர் கழகம் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் வாழைச்சேனை சேகரத்தின் முகாமைக்குரு அருட்கலாநிதி கே.எஸ்.நிஸாந்தன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வு சர்வமத பிரார்த்தனைகளுடன் ஆரம்பமானது.

குறித்த பல்சமய சிறுவர் கழகத்தில் நூலகம், விளையாட்டு நிகழ்வுகள், சிறுவர்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள், இனங்களுக்கிடையிலான கலை,பண்பாட்டு ரீதியிலான நிகழ்வுகள், சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் என்பன இடம்பெறும் இடமாக இது திகழவுள்ளது.

இந் நிகழ்வில் இலங்கை தேசிய கிருஸ்தவ மன்றத்தின் பொதுச் செயலாளர் அருட்பணி சுஜிதர் சிவநாயகம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறுவர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

# மாமரத்தை வீழ்த்திய யானை!



காரைதீவு, நவ.

பாரிய மாமரம் ஒன்றை அடியோடு முறித்து வீழ்த்தியது காட்டு யானை.

இச் சம்பவம் சம்மாந்துறையை அடுத்துள்ள கந்தன் வெளி வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காரைதீவைச் சேர்ந்த இராஜநாயகம் ரமேஷ் என்பவரின் கந்தன்வெளி வயலில் இருந்த பாரிய மாமரமே இவ்விதம் முறித்து வீழ்த்தப்பட்டது.

அத்தோடு அவரது விதைக்கப்பட்ட வயலும் யானை திரிந்ததால் சேதத்துக்குள்ளானது.

இவ்வாறு காட்டு யானையின் அட்டகாசம் தினமும் அந்த பகுதியிலே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. விவசாயிகள் அச்சத்துடன் விதைப்பில் ஈடுபட வேண்டி இருக்கின்றது.

# கிழக்கு மாகாணத்தில் 1000 பயன்தரும் மரக்கன்றுகள் நடும் திட்டம் ஆரம்பம்



மட்டக்களப்பு, நவ. 15

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தில் 1000 பயன்தரும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

"மாகாணம் செழிக்க மரம் நாடுவோம்" எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ. முஹம்மது

பைஷல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு அட்டாளைச்சேனை தள ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எஸ்.அப்துல் ஹை பிரதம அதிதியாக கலந்துகொண்டு மரம் நடும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

பிரதேசம் செழித்தால், மாவட்டம் செழிக்கும். மாவட்டம் செழித்தால், மாகாணம் செழிக்கும். மாகாணம் செழித்தால், நாடு செழிக்கும். இதுவே இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும் என்றும், இந்தப் பயன்தரும் 1000 மரக்கன்றுகளை இவ்வருட இறுதிக்குள் மாகாணத்திலுள்ள பிரதேசங்களில் நட்டு வைக்கப்படும் என கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எம்.ஐ.முஹம்மது பைஷல் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ.ஆர்.எம்.றிம்ஸான், உபதலைவர், பொருளாளர், உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ)

# அமெரிக்கப் படைகள் மீது சிரியா தொடர் தாக்குதல்!

## ஈரானுடன் இணைந்த குழுக்கள் கைவரிசை

டமஸ்கஸ், நவ. 15

**வடகிழக்கு சிரியாவில் உள்ள அமெரிக்க மற்றும் சர்வதேச படைகள் 24 மணி நேரத்தில் குறைந்தது நான்கு முறை ஆளில்லா விமானங்கள் மற்றும் ரொக்கெட்டுகளால் தாக்கப்பட்டுள்ளன.**

**இருப்பினும் உயிரிழப்புகள் எதுவும் இல்லையெனவும், சிறிய சேதம் மட்டுமே ஏற்பட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை அமெரிக்கப் படைகள் மூன்று முறை தாக்குதலுக்கு உள்ளாகின.

கடந்த திங்கள்கிழமை காலை ருமாலின் தரையிறங்கும் மண்டலத்தில் அமெரிக்கப் படைகள் மீது பல ஆளில்லா விமானங்கள் ஏவப்பட்டன. ஒரு ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டது. ஆனால் மற்றொன்று நான்கு கூடாரங்களை சேதப்படுத்தியது.

ஈரானுடன் இணைந்த குழுக்களின் முகாம்கள் மீது அமெரிக்கா ஞாயிற்றுக்கிழமை இரண்டு வான்வழித் தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து இந்த தாக்குதல்கள் நடந்தன.

ஒக்ரோபர் தொடக்கத்தில் இருந்து ஈராக் மற்றும் சிரியாவில் குறைந்தது 40 முறை அமெரிக்க மற்றும் கூட்டணி துருப்புக்கள் தாக்கப்பட்டுள்ளன. காஸாவில் நடந்த போரில் இஸ்ரேலுக்கு அமெரிக்கா அளித்த ஆதரவின் பிரதிபலிப்பாக இந்தத் தாக்குதல்கள் நடந்ததாகக் போராளிக் குழுக்கள் கூறுகின்றன.

இதுவரை, குறைந்தபட்சம் 56 அமெரிக்கப் பணியாளர்கள் சிறிய காயங்கள் முதல் அதிர்ச்சிகரமான மூளைக் காயங்கள் வரை அனைத்திலும் பாதிக்கப்பட்டுள்ளனர், இருப்பினும் அனைவரும் பணிக்குத் திரும்பியுள்ளனர் என்று பென்டகன் தெரிவித்துள்ளது.




ஈரானால் ஆதரிக்கப்படும் குழுக்களே இந்த தாக்குதல்களின் பின்னணியில் இருப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டுகிறது. ஆனால் ஈரான் அதை நிராகரித்துள்ளது. அந்த குழுக்கள் தங்கள் சொந்த விருப்பப்படி செயல்படுவதாகக் கூறுகிறது.

அமெரிக்கா சிரியாவில் 900 துருப்புகளையும், அண்டை நாடான ஈராக்கில் மேலும் 2,500 துருப்புக்களையும் கொண்டுள்ளது. 2014 இல் இரு நாடுகளிலும் பெரும் பகுதிகளைக் கைப்பற்றிய ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் மீள் எழுச்சியைத் தடுக்க முயற்சிக்கும் உள்ளூர் படைகளுக்கு ஆலோசனை மற்றும் உதவி செய்யும் பணியில் அமெரிக்கா இருப்பதாக அது கூறுகிறது.

இஸ்ரேல்-ஹமாஸ் மோதல் மத்திய கிழக்கு முழுவதும் பரவி தனிமைப்படுத்தப்பட்ட தளங்களில் உள்ள அமெரிக்க துருப்புக்களை இலக்குகளாக மாற்றலாம் என்ற கவலை அதிகரித்து வருவதாக பாதுகாப்பு ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

(அ)



# காஸா வைத்தியசாலைகளை கட்டாயம் பாதுகாக்கவேண்டும்

## இஸ்ரேலுக்கு அமெரிக்கா வலியுறுத்தல்

நியூயோர்க், நவ. 15

இஸ்ரேல் - ஹமாஸ் போர் உக்கிரமடைந்த வரும் நிலையில், காஸா வைத்தியசாலைகளை பாதுகாத்தல் கட்டாயமாக்கப்படல் வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் குறித்து இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே ஜோ பைடன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வைத்தியசாலைகளை பொறுத்தவரை குறைவான ஊடுருவல் நடவடிக்கை இருக்கும் என்பது என்னுடைய நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்பு.

நாங்கள் இஸ்ரேலுடன் தொடர்பில் இருக்கிறோம். பிணைக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாகவும் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. காஸாவில் உள்ள வைத்தியசாலைகளை கட்டாயமாக பாதுகாக்கப்பட வேண்டும்." எனத் தெரிவித்தார்.

காஸாவில் உள்ள மிகப்பெரிய வைத்தியசாலையான அல்-ஷிபாவில் நூற்றுக்கணக்கானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில், அல்-ஷிபா வைத்தியசாலை இஸ்ரேல் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் போர் காரணமாக இதுவரை காஸாவில் ஆயிரக் கணக்கான குழந்தைகள் உள்பட 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்துள்ளனர்.

இஸ்ரேலில் இதுவரை 1,200 பேர் இறந்துள்ளனர். 200இற்கும் மேற்பட்டோர் அங்கிருந்து பிணைக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# ஜப்பானிய துணை நிதியமைச்சர் வரி முறைகேட்டால் பதவி விலகல்



ரோக்கியோ, நவ. 15

ஜப்பானிய துணை நிதிய மைச்சர் கெஞ்சி கண்டா பதவி விலகியுள்ளார்.

வரி செலுத்துவதில் தவறிழைக்கப்பட்டதாக வெளியான தகவல்களைத் தொடர்ந்து அவர் பதவி விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலைமையானது ஜப்பான் பிரதமர் பியூமியோ கிஷிடாவுக்கு மற்றுமொரு அடியாக அமைந்துள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கப் பத்திரங்கள் மற்றும் நாணயக் கொள்கைகளுக்குப் பொறுப்பான நிதியமைச்சர் கெஞ்சி கண்டா, இந்த விடயம் பாராளுமன்ற விவாதத்தை சீர்குலைக்க விரும்பாததால் தாம் பதவி விலகுவதாக தெரிவித்துள்ளார்.

கெஞ்சி கண்டாவுக்குச் சொந்தமான தனியார் நிறுவனம் ஒன்று பல்வேறு சந்தர்ப்பங்களின் போது வரி செலுத்துவதற்கு தவறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே, பிரதமர் பியூமியோ கிஷிடா தமது மைச்சரவையை மாற்றியமைத்து இரண்டு மாதங்களில் பதவி விலகும் மூன்றாவது அதிகாரி கெஞ்சி கண்டா ஆவார்.

(அ)

# காஸா விவகாரத்தை அமெரிக்கா கையாளும் விதம் இராஜாங்கத் திணைக்களத்துக்குள் கடும் அதிருப்தி

## ஏற்றுக்கொள்கின்றார் பிளிங்கன்

நியூயோர்க், நவ. 15

ஹமாஸ்-இஸ்ரேல் மோதலை அமெரிக்கா கையாளும் விதம் குறித்து அமெரிக்க இராஜாங்க திணைகளத்திற்குள் கடும் கருத்துவேறுபாடுகள் காணப்படுவதை அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்ரனி பிளிங்கன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ள மின்னஞ்சலில் பிளிங்கன் இதனை தெரிவித்துள்ளார்.

காஸா யுத்தத்தை அமெரிக்கா கையாள்வது குறித்து அமெரிக்க இராஜாங்க திணைக்களத்திற்குள் மாத்திரமல்லாமல் பைடன் நிர்வாகத்திற்குள்ளேயே கடும் அதிருப்தி காணப்படும் நிலையிலேயே பிளிங்கன் இந்த மின்னஞ்சலை அனுப்பியுள்ளார்.

யு.எஸ்.எயிட்டை சேர்ந்த 100 இற்கும் மேற்பட்டவர்கள் உடனடி யுத்த நிறுத்தத்தைக் கோரி கடிதம் எழுதியுள்ளதாக கடந்த வாரம் சி.என்.என் செய்தி வெளியிட்டிருந்தது.

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் அதிருப்தி கடிதங்கள் வெளியாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உங்களில் பலருக்கு இந்த ஆழ்ந்த நெருக்கடியால் ஏற்படும் துன்பம் தனிப்பட்ட பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது என்பதை நான் அறிவேன் என பிளிங்கன் தனது மின்னஞ்சலில் தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் சிறுவர்கள் குழந்தைகளின் படங்களை தினசரி பார்க்கும்போது ஏற்படும் வேதனையை நானும் அனுபவிக்கின்றேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# காசா மீதான இராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்த சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்

## ஈரான் வெளியுறவு அமைச்சர் வலியுறுத்து

தெஹ்ரான், நவ. 15

காசா மீதான இராணுவ ஆக்கிரமிப்பை நிறுத்துவதற்கு சர்வதேச சமூகம் இஸ்ரேல் மீது அழுத்தம் கொடுக்க வேண்டும் என ஈரான் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காசாவில் நிபந்தனையற்ற மனிதாபிமான போர் நிறுத்தம் உடன் அமலுக்கு வர வேண்டும் என்றும், முற்றுகையிடப்பட்ட பகுதிக்கு மனிதாபிமான உதவிகள் அனுப்பப்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

ஹங்கேரியப் பிரதிநிதி பீற்றர் சிஜ்ஜார்டோவுடன் தொலைபேசி உரையாடலின் போதே ஈரான் வெளிவிவகார அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

மேலும் காசாவில் பாலஸ்தீனியர்கள் மீது குண்டுவீசி படுகொலைகளை நடத்தி இஸ்ரேலிய அரசாங்கம், அனைத்து மனிதாபிமான மற்றும் சர்வதேச சட்டங்களையும் தெளிவாக மீறியுள்ளது என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

(அ)

# தோட்டத் தொழிலாளர் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் சொந்த நிலம்!

## அமைச்சர் ஜீவன் நம்பிக்கை

கொழும்பு, நவ. 15

**தோட்டத்தொழிலார்களுக்கு அரசாங்கம் இலவச காணிகளை வழங்குவதாக அறிவித்துள்ளமையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் வரவேற்றுள்ளார்.**

இதற்காக 4 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் விரைவில், ஒவ்வொரு தோட்ட தொழிலார் குடும்பத்திற்கும் சொந்த நிலம் கிடைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் 2024 ஆம் ஆண்டிற்கான 10 பில்லியன் ஒதுக்கீட்டின் மூலம், மலையகத்தின் வாழ்க்கைத் தரம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நுவரெலியா மாஸ்டர் டெவலப்மென்ட் திட்டத்தின் ஒரு பகுதியாக நுவரெலியாவில் புதிய பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

அத்தோடு கொத்மலையில் உள்ள காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்துடன் இணைந்து, நுவரெலியா மாவட்டத்தில்



விரைவில் இரண்டு பல்கலைக்கழகங்கள் தொடங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கண்டியில் அமைக்கப்படவுள்ள புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தோடு மத்திய மாகாணம் விரைவில் உயர்கல்வியின் மையமாக மாறும் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டார். (அ)

# புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள மீனவ சட்டம் நிறுத்தப்படவேண்டும்

## தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் கோரிக்கை

கொழும்பு, நவ. 15

புதிதாக கொண்டுவரப்படவுள்ள மீனவ சட்டம் நிறுத்தப்பட வேண்டும் என தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளர் ஹேமன் குமார தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள புதிய சட்டம் மீனவர்கள் மத்தியில் கொண்டு வரப்பட்டு அவர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்தின் ஊடாக மீனவர்கள் தொடர்பான அனைத்து விடயங்களும்



பணிப்பாளரின் அதிகாரத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இது மிகவும் ஆபத்தானது.

அதனை நிறை வேற்றுவதாக இருந்தால் மீனவர்கள் மத்தியில் கருத்து பரிமாற்றத்துக்கு உட்படுத்தி பல விடயங்கள் திருத்தியமைக் கப்பட வேண்டும்.

இதேவேளை அடுத்த வருட பட்ஜெட்டில் மீனவர்களுக்கான எந்த ஒரு திட்டமும் உள்வாங்கப்படவில்லை எனவும் இது தொடர்பாக அனைவரும் பேசவேண்டும்-என்றார். (அ)

# இலங்கை சுங்கச் சட்டத்தை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, நவ. 15

இலங்கை சுங்க சட்டத்தை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நேற்று முன்தினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2032ஆம் ஆண்டளவில் இலங்கையின் அரச கடன் 95 சதவீதமாகக் குறைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரச வங்கிகளின் 20 சதவீத பங்குகளை மூலோபாய முதலீட்டாளர்கள் அல்லது பொதுமக்க



ளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வங்கிக் கட்டமைப்பில் மூலதனத்தை மேம்படுத்தும் செயன்முறைக்கு ஆதரவளிப்பதற்காக 450 மில்லியன் ரூபாய் ஒதுக்கிடப்படும்.

பருவநிலை மாற்றம் தொடர்பான ஆணைக்குழு விரைவில் ஸ்தாபிக்கப்படும்.

பருவநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதற்காக கொத்மலை பகுதியில் 600 ஏக்கர் காணி ஒதுக்கப்படவுள்ளது-என்றார்.

# நன்னீர் மீன்பிடித் தொழிலின் விருத்திக்கு ரூ. 200 மில்லியன்!

கொழும்பு, நவ. 15

நன்னீர் மீன்பிடித் தொழிலின் அபிவிருத்திக்காக 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான நேற்று முன் தினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இதனை பாராளுமன்றில் சமர்ப்பித்தார்.

இதன்போதே, அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு கடற்பகுதிகளில் மீன்பிடி வசதிகளை மேம்படுத்துவதற்கு 500 மில்லியன் ரூபாவை



ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியை அடுத்த 5 ஆண்டுகளுக்குள் 53 சதவீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பால் உற்பத்திக் கைத்தொழிலினை வாழ்வாதார செயற்பாட்டிலிருந்து இலாபம் பெறும் கைத்தொழிலாக மாற்றும் பொருட்டு மூலதன முதலீடுகளை அதிகரிப்பது முக்கியமானதாகும்.

தேசிய கால்நடைவள அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான விவசாயப் பண்ணைகள் அனைத்தையும் வினைத்திறனுடன் பயன்படுத்தி தனியார்துறை பங்களிப்புடன் பால் உற்பத்தியை 5 வருடத்திற்குள் 53 சதவீதமாக அதிகரிப்பதற்கு விசேட வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படும்.

தற்பொழுது எமது தினசரி பால் உற்பத்தி 4.3 மில்லியன் லீற்றர்களாகும்.

இந்த கருத்திட்டம் நிறைவடைகின்ற போது, தினசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு 20 மில்லியன் லீற்றர் வரை அதிகரிக்கும்-என்றார். (அ)

# மாகாண சுற்றுலா சபைகளை வலுப்படுத்த ரூ. 750 மில்லியன்

கொழும்பு, நவ. 15

மாகாண சுற்றுலா சபைகளை வலுப்படுத்துவதற்காக 750 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நேற்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன்போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நெல் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

அதற்காக 2,500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

சுற்றுலாப் பயணிகளுக்கு உள்ளூர் மற்றும் ஆயுர்வேத சிகிச்சைகளை வழங்குவதற்காக விருந்தகங்களில் உள்ளூர் ஆயுர்வேத சிகிச்சை நிலையங்களை நிறுவ நூறு மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும்.

இலங்கையில் மருத்துவ ஆராய்ச்சியை மற்ற நாடுகளின் நிலைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக 75 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு பின்னர் மேலும் நிதி ஒதுக்கப்படும்.

மருந்துகள் கொள்முதல் செய்வதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்க தனி நிறுவனம் அமைக்கப்படும்.

சுரக்ஷா காப்பீட்டு முறை மீண்டும் அறிமுகப்படுத்தப்படுவதுடன், அந்த திட்டத்தில் அனைத்து மாணவர்களும் உள்வாங்கப்படுவர்-என்றார். (அ)

# இலங்கையை சேர்ந்த குடும்பம் மீது அவுஸ்திரேலியாவில் சிலர் தாக்குதல்

கான்பரா, நவ. 15

அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் இலங்கையைச் சேர்ந்த குடும்பம் மீது இளைஞர்கள் குழுவொன்று தாக்குதல்களை நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தாக்குதலினால் அந்த குடும்பத்தைச் சேர்ந்த விசேட தேவையுடைய சிறுமி அதிர்ச்சியடைந்துள்ளதாக அவரின் பெற்றோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த குறித்த குடும்பம் சுமார் 12 வருடங்களாக அவுஸ்திரேலியாவில் வசித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தமது மகளுடன் சுற்றுலா சென்றபோதே தாம் தாக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# பெருந்தோட்ட வீடுகளை நிர்மாணிக்க நான்கு பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு!

கொழும்பு, நவ. 15

பெருந்தோட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்கான காணி உரிமைகளை வழங்குவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக 4 பில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட உரையினை முன்வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை கூறினார்.

கடந்த சில ஆண்டுகளாக முறையாக பராமரிக்கப்படாமல் உள்ள கிராமப் புற வீதிகள், மற்றும் பழுதடைந்த கிராம வீதிகளை பராமரிக்க, பத்தாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# ஆங்கிலமொழி அறிவு விருத்திக்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு!

கொழும்பு, நவ. 15

ஆங்கில மொழி அறிவை வழங்குவதற்காக 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நேற்று முன்தினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இதனை பாராளுமன்றில் சமர்ப்பித்தார்.

இதன்போதே, அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பல்கலைக்கழக கல்வியைப் பெறாத இளைஞர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

வட்டியில்லா மாணவர் கடன் முறைக்கு கூடுதலாக, வணிக வங்கிகள் மூலம் கடன் வழங்கும் முறை பரிந்துரைக்கப்படுவதுடன், தொழில் கிடைத்தவுடன் அதற்கான கடனை அடைக்க முடியும்-என்றார்.

## கிரிக்கெட் இடைக்கால சபைக்கு தடை:

# விசாரணைகளில் இருந்து விலகினார் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்!

கொழும்பு, நவ. 15

கிரிக்கெட் இடைக்கால நிர்வாக சபையின் செயற்பாடுகளை இடை நிறுத்தி இடைக்காலத் தடை விதித்த விவகாரம் தொடர்பான விசாரணையில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன நேற்று செவ்வாய்க்கிழமை விலகியுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பில் விளை யாட்டுத்துறை அமைச்சரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு, நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன மற்றும் விக்கும் களுஆராச்சி ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் இந்த வழக்கை விசாரிப்பதற்கு தமது கட்சிக்காரர் ஆட்சேபனை தெரிவித்ததாக விளையாட்டுத்துறை அமைச்சர் சார்பில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

இந்நிலையில், விளையாட்டுத்துறை அமைச்சர், சில அமைச்சரவை உறுப்பி



னர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தம்மை நியாயமற்ற முறையில் விமர்சித்ததன் காரணமாகவே இந்த வழக்கு விசாரணையில் இருந்து விலக தீர்மானித்ததாக தலைமை நீதியரசர் நிஸங்க பந்துல கருணாரத்ன தெரிவித்தார். (அ)

## இலங்கைக்கு....

மேலும், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை எனவும் புவிசரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, திருகோணமலை - மொறவெவ பகுதியில் கடந்த 12ஆம் திகதி நிலநடுக்கம் ஒன்று பதிவாகியிருந்தது.

இந்த நிலநடுக்கத்தின் அளவு ரிச்டர் அளவுகோலில் 3.4 ஆக பதிவாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## காஸாவில்....

ரிஷாத் பதியுதீன் கருத்து தெரிவிக்கையில்-

159இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட மகஜரொன்றை கொழும்பில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் கையளித்துள் ளோம்.

ஐ.நா. பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டெரஸுக்கு முகவரியிட்ட இந்தக் கடிதமே இலங்கை தூதரகத்தில் கையளிக்கப்பட்டது. பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 பேரும் இதே நிலைப்பாட்டிலேயே உள்ளனர். எனினும், இந்த முயற்சி அவசரமாக மேற்கொள்ளப்பட்டதனால், அனைவரினது கையொப்பங்களையும் பெறமுடியாமல் போய்விட்டது.

இஸ்ரேலியர்களால் ஏவப்படும் ஏவுகணைகளும் பொழியப்பட்டு வரும் குண்டுகளும் காசாவில் மிக மோசமான அழிவை ஏற்படுத்தி வருகின்றன. பச்சிளம் குழந்தைகள், பெண்கள் என்ற விவஸ்தையின்றி குண்டுகளை வீசி, இந்த அக்கிரமங்களை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

இஸ்ரேல் மேற்கொள்ளும் இந்த அராஜகத்துக்கு எதிராக உலக நாடுகள் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்குலக நாடுகள் இஸ்ரேலுக்கு உதவக் கூடாது. இந்த யுத்தத்தினால் 120இற்கு மேற்பட்ட ஐ.நா ஊழியர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐ.நாவில் அங்கம் வகிக்கும் நாடுகளில், 120 உலக நாடுகள் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டுமென பிரேரணை கொண்டுவந்தபோதும், ஐ.நாவினால் இதுவரை எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாதிருக்கின்றது. அத்துடன், 54இற்கு மேற்பட்ட முஸ்லிம் நாடுகளும் இந்த விவகாரத்தை கையிலெடுத்து, யுத்த நிறுத்தத்தை கொண்டுவர முயற்சிக்க வேண்டும்-என்றார். (அ)

## யாழ்....

பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சங்கானை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/167 கிராம சேவகர் பிரிவில் ஆலயம் ஒன்றிற்கு மேல் அரசமரம் ஒன்று சாய்ந்த தில் குறித்த ஆலயம் சேதமடைந்துள்ளது - என்றார். (அ)

## கிரிக்கெட்டையும்....

ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே ஜனாதிபதி இதனை கூறினார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் குறித்து ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்குத் தெளிவுபடுத்துவதற்காக இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆசிரியர்கள் மற்றும் செய்திப் பணிப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி,

இவ்வருட வரவு-செலவுத் திட்டம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியலை மாற்றியமைக்கும் வரவு-செலவுத் திட்டமாகும்.

வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் இலக்கை ஏற்கனவே தான் நெருங்கி விட்டதாகவும், அரசியல் நோக்கின்றி அந்த இலக்கை அடைய எதிர்பார்க்கி றோம்.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியே வெற்றி பெறும். எப்பொழுதும் மக்களுக்கு உண்மையைச் சொல்லும் கட்சியாக இருப்பதாலேயே ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் ரீதியான பின்னடைவுகளைச் சந்திக்கிறது. இருப்பினும், மக்களுக்கு உண்மையைச் சொல்வதே ஐக்கிய தேசிய கட்சியின் பலமாகும்.

எதிர்வரும் தேர்தலில் ஏனைய அரசியல் கட்சிகளும் போட்டியிடும். இருப்பினும் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதே தனது முதல் கடமையாகும் எனவும் அதன் பின்னர் ஏனைய விடயங்களில் கவனம் செலுத்த முடியும்-என்றார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஆகியோர் 2024 வரவு செலவுத் திட்டம் மற்றும் அதன் அடிப்படை குறித்து இங்கு நீண்ட விளக்கமளித்தனர்.

வெகுஜன ஊடக மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

## நாட்டின் பொருளாதார....

கூறப்பட்டுள்ளது.

எனினும் நீதியரசர் பிரியந்த ஜயவர்தன மட்டும் மனுக்களை நிராகரிக்க வேண்டும் என தனியாக தீர்ப்பறிவித்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, விஜித் மலல்கொட மற்றும் எல்.ரி.பி. தெஹிதெனிய, முர்து பெர்ணான்டோ ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணை செய்து இவ்வாறு 4:1 எனும் அடிப்படையில் தீர்ப்பை அறிவித்துள்ளது.

அத்துடன் பிரதிவாதிகள் , மனுதாரர்களுக்கு 150,000 ரூபாவை வழக்கு கட்டணமாக செலுத்த வேண்டும் எனவும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மூன்று பல்கலைக்கழக புத்திஜீவிகள், இலங்கையைச் சேர்ந்த நீச்சல் வீரரும் பயிற்றுவிப்பாளருமான ஜூலியன் பொல்லிங், இலங்கை வர்த்தகப் பேரவையின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, ட்ரான்ஸ் பரன்ஸி இன்டர்நஷனல் அமைப்பு மற்றும் ஜெஹான் கனக ரத்ன ஆகியோரால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் முறையற்ற பொருளாதார முகாமைத்துவம் மற்றும் சீரற்ற நிதி நிர்வாகம் ஆகியவற்றுக்கான முக்கிய பொறுப்பாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அம்மனுக்களில் கோரப்பட்டிருந்தது.

இந்த மனுக்களில் மொத்தமாக 39 பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டிருந்தனர்.

மேற்குறிப்பிட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி அத்துலசிறி குமார சமரக்கோன், புத்திஜீவிகளான சூசைப்பு நேவிஸ் மொறாயஸ் மற்றும் கலாநிதி மஹிம் மெண்டிஸ் ஆகியோர் தமது மனுக்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் முன் னாள் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, மத் திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவாட் கப்ரால் மற்றும் டபிள்யூ.டி.லக்ஷ்மன், நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல உள்ளிட்ட 39 பேரை பிரதிவாதிகளாகப் பெயரிட்டிருந்தனர்.

எனினும் பின்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதை தொடர்ந்து அவர் பிரதிவாதி பட்டியலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரதிவாதி பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளார். கோட்டாபய ஜனாதிபதியாக பதவியேற்றதை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வரிக்குறைப்புக்களே நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைக்குப் பிரதான காரணமென மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கோட்டாபய முன்னாள் பிரதமர் மகிந்தவுடன் இணைந்து தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக மக்களால் செலுத்தப்படும் வரிகளைக் குறைப்பதற்குத் தன்னிச்சையான தீர்மானத்தை மேற்கொண்டார் என்றும், இத் தீர்மானம் முற்றுமுழுதாக அரசியல் ரீதியான நகர்வென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாறானதொரு பின்னணியில் கணக்காய்வாளர் நாயகம் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் கொடுக்கல், வாங்கல்களைக் கணக்காய்விற்கு உட்படுத்தி மத்திய வங்கிக்கு ஏற்பட்டிருக்கும் நட்டத்தை மதிப்பீடு செய்யும்படி உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய உள்ளிட்டோரை பொறுப்புக் கூறவேண்டியவர்கள் என அறிவிக்கும் தீர்ப்பை பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான முர்து பெர்ணான்டோ, விஜித் மலல்கொட, புவனேக அலுவிஹார ஆகியோரின் இணக்கத்துடன் வாசித்தார்.

தனியாக தீர்ப்பொன்றினை அறிவித்த நீதியரசர் பிரியந்த ஜயவர்தன, தான் குறித்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை நிராகரிப்பதாக அறிவித்தார்.

இந்த மனுக்கள் உரிய சட்ட கால எல்லைக்குள் தாக்கல் செய்யப்படவில்லை உள்ளிட்ட சில காரணிகளை மையப்படுத்தி மனுக்களை நிராகரிக்கும் தீர்மானத்தை அறிவிப்பதாக அவர் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

பெரும்பான்மை நீதியரசர்களின் தீர்ப்பை அறிவித்த பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, 2019 நவம்பர் மாதம் முதல் 2022 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரையில் பொறுப்புக் கூறவேண்டிய பிரதிவாதிகள், முக்கிய பொறுப்புக்களை வகித்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த காலப்பகுதியில் நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலைமை ஏற்படும் என்பதை இந்த பிரதிவாதிகள் விளங்கிக்கொண்டிருந்தமை தெளிவாவதாகவும், அப்படி இருந்தும் அந்த நிலைமையை சீர் செய்ய அவர்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனவும் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலைமை ஏற்படும் என சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட பொருளா தார நிபுணர்கள் எச்சரித்தும், பிரதிவாதி கள் அவற்றை செவிமடுத்து செயற்பட்ட தாக தெரியவில்லை எனவும் பொருளா தார நெருக்கடியை தடுக்க தாம் அனைத்து முயற்சிகளையும் செய்ததாக பிரதிவாதிகள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அந்த தீர்ப்பில் பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

இதனூடாக பிரதிவாதிகள் பொது மக்களின் நம்பிக்கை, பொறுப்பினை மீறி செயற்பட்டுள்ளதாகவும் அது அரசியலமைப்பின் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாகவும் அத்தீர்ப்பில் பிரதம நீதியரசர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இவ்வாறு அடிப்படை உரிமை மீறப்பட்டமை தொடர்பில் நட்ட ஈடுச் செலுத்த உத்தரவு பிறப்பிப்பதில்லை என சுட்டிக்காட்டிய பிரதம நீதியரசர் பிரதிவாதிகள் மனுதாரர்களுக்கு தலா 150000 ரூபா வீதம் வழக்குக் கட்டணம் செலுத்த வேண்டும் என அறிவித்தார்.

இம்மனுவில் மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணிகளான உபுல் ஜயசூரிய , சந்தக ஜயசூரிய மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி விஷ்வக பீரிஸ் ஆகியோர் ஆஜராகினர்.

நாணய சபை சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா பிரசன்னமானார். பிரதிவாதிகளான மகிந்த மற்றும் பசில் ஆகியோர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன ஜனாதிபதி சட்டத்தரணி நவீன் மாரப்பனவுடன் ஆஜரானார்.

ஏனைய பிரதிவாதிகளுக்காக ஜனாதிபதி சட்டத்தரணிகளான சவேந்ர பெர்ணான்டோ, அனுர மெத்தேகொட, நிஹால் ஜயவர்தன உள்ளிட்டோர் ஆஜரானதுடன் சில பிரதிவாதிகளுக்காக சட்ட மா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் நெரின் புள்ளே ஆஜரானார். (அ)

## மூளைக்....

வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மூளைக் காய்ச்சலினாலேயே இந்த மரணம் சம்பவித்துள்ளதாக பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

# தேர்தலை இலக்கு வைத்த வரவு-செலவுத்திட்டமே இது!

## ஐக்கிய மக்கள் சக்தி சாடல்



கொழும்பு, நவம்பர் 15

**2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தலை இலக்கு வைத்தே வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.**

2024 ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் கருத்து வெளியிட்ட பொருளாதார நிபுணரான ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கூறியவை வருமாறு:-

அடுத்த வருடம் தேர்தல் உறுதியாகியுள்ளது. அத்தேர்தலுக்கு தயாராகும் வகையில் பட்ஜெட்டில் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன. அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச்செலவு கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் முதல் அது வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. எனவே ஏப்ரல் மற்றும் ஒக்ரோபருக்கு இடையில் தேர்தல் நடைபெறுவது உறுதியாகின்றது.

நாம் பயணிக்கவேண்டிய திசை எது? அத்திசையை நோக்கி செல்ல வேண்டுமெனில் கடும் பொருளாதார மறுசீரமைப்பு அவசியம். அத்திசையை நோக்கி பயணிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்பது புலனாகின்றது. ஆனால் இதனை நடைமுறைப்படுத்த முடியுமா என்பதில்தான் பிரச்சினை உள்ளது. வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது. சிறு தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்படுவார்கள்.

விமானம் செல்வதுபோல் ஒரு திசையில் செல்ல வேண்டும். ஆனால் ஏதேனும் சிக்கல் எனில் விமானம் கீழே விழுவதற்கான சாத்தியம் அதிகம். கடன் சுமை அதிகரித்துள்ளது. இது பற்றி நாளை (இன்று) முழுமையாக தெளிவுபடுத்துவேன்.

யோசனைகள் சிலவேளை யோசனையாகவே இருக்கக்கூடும் - என்றார்.

# வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 17ஆம் திகதிவரை கனமழை!

யாழ்ப்பாணம், நவ. 15

வடக்கு மற்றும் கிழக்கில் நாளைமறுதினம் 17ஆம் திகதி வரை கனமழை தொடரும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் அந்தமான் - நிக்கோபார் தீவுகளுக்கருகே தோன்றிய தாழமுக்கம் தற்போது ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறியுள்ளது. இது இன்று காலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் அதேவேளை வடக்கு, வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து இந்தியாவின் ஒடிசாவுக்கருகே நாளை அல்லது நாளைமறுதினம் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் தற்போது கிடைத்து வரும் செறிவான கனமழை எதிர்வரும் 17ஆம் திகதி வரை தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை எதிர்வரும் 17ம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலைமையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்கு செல்வதில் அவதானமாக இருப்பது அவசியம். - என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# சீன ஜனாதிபதியின் சிறப்புத் தூதர் சனிக்கிழமை இலங்கை வருகிறார்

கொழும்பு, நவ. 15

சீன ஜனாதிபதியின் சிறப்பு தூதுவர் ஷென் ஹிகின் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இரு நாள் விஜயத்தை மேற் கொண்டு எதிர்வரும் சனிக்கிழமை சீன ஜனாதிபதியின் சிறப்பு தூதுவர் ஷென் ஹிகின் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக சீன வெளிவிவகார அமைச்சு மேலும் கூறியுள்ளது. (அ)

# திண்டாடும் மக்களுக்கு பட்ஜெட்டில் தீர்வு இல்லை

## ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு



கொழும்பு, நவ. 15

பொருட்களின் விலையேற்றம், வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு உள்ளிட்டவையால் திண்டாடும் மக்களுக்கு பட்ஜெட்டில் எந்தவொரு தீர்வும் இல்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பட்ஜெட் குறித்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பட்ஜெட் வருவதற்கு முன்னரே வற் வரி அதிகரித்துவிட்டது. இதனால் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரிக்கும். ஏற்கனவே வாழ்க்கைச் சுமை அதிகரிப்பால் மக்கள் தள்ளாடுகின்றனர். வற் வரி அதிகரிப்பு அவர்கள் மீது மேலும் சுமையை திணிக்கும்.

இந்நிலையில்தான் 6 மாதங்களுக்கு பிறகு கிடைக்கவுள்ள கொடுப்பனவு அதிகரிப்பு குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஒட்டுமொத்தத்தில் மக்கள் நலன் பற்றி சிந்திக்காத பாதீடே இது - என்றார். (அ)

# பட்ஜெட்டுக்கு ராஜித ஆதரவு!

## ஆளும் கட்சியுடன் இணைவாரா?



கொழும்பு, நவ. 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக் கப்பட்ட வரவு - செலவுத் திட்ட யோசனையில் எந்த தவறும் இல்லை என ஐக்கிய மக்கள் சக்தியின பாராளு மன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்க பொதுஜன பெரமுனவால் மாத்திரமே முடியும் எனவும் அவர் கூறினார்.

"வரவு - செலவுத் திட்டத்தில் நாட்டில் அனைத்து துறைக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

2002இல் காணி உரிமைகள் தொடர்பான திட்டத்தை கொண்டு வந்தேன். அதனையே 2015இல் கயந்த கருணாதிலக எம்.பி கொண்டு வந்தார். அந்த திட்டத்தையே ஜனாதிபதி தற்போது முன்மொழிந்துள்ளார். இந்த வரவு - செலவுத் திட்டம் ஐ.தே.கவின் வரவு - செலவுத் திட்டமே. அதனால் அதனை பொதுஜன பெரமுனவால் மாத்திரமே எதிர்க்க முடியும்."

என்றும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கும் சூழலில் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ராஜித சேனாரத்ன, ஆதரித்துள்ளமை அரசியல் அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராஜித சேனாரத்ன, வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவளித்து அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள உள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன.

கடந்த சில மாதங்களாக ராஜித சேனாரத்ன, அரசாங்கத்தை விமர்சிப்பதை முழுமையாக நிறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியின் பல திட்டங்களுக்கு அவர் ஆதரவான கருத்துகளையும் முன்வைத்துள்ளார். அரசாங்கத்துடன் இணைவதற்கான இரகசிய பேச்சுகளை ராஜித சேனாரத்ன, நடத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ள பின்புலத்திலேயே வரவு - செலவுத் திட்டத்துக்கும் அவர் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார். (அ)

# இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கிப் பிரதிநிதிகள் குழு!

கொழும்பு, நவ. 15

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 வருடங்களில் இலங்கையின் சுகாதாரத் துறைக்கு எவ்வாறு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காகவே இந்தக் குழுவினர் வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த குறிவினர் நேற்று முன் தினம் கொழும்பு - மாளிகாவத்தை சுகாதாரப் பிரிவுக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இந்தக் குழுவில் சுகாதார நிபுணர்களுடன் பொருளாதார நிபுணர்களும் உள்ளடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நாட்டுக்குள் வந்தது தரமற்ற எரிபொருள்!

## தொழிற்சங்க கூட்டமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 15

தரமற்ற எரிபொருள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஐக்கிய தொழிற்சங்க கூட்டமைப்பின் அழைப்பாளர் ஆனந்த பாலித தெரிவித்தார்.

இந்த தரக்குறைவான எரிபொருள் ஐ.ஓ.சி நிறுவனம் மற்றும் சினோபெக் ஆகிய எரிபொருள் நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐ.ஓ.சி நிறுவனம் இம்மாதம் 5ஆம் திகதி சிங்கப்பூரில் இருந்து 31ஆயிரம் மெற்றிக் தொன் டீசலை நாட்டுக்கு இறக்குமதி செய்தது. அதில் 20ஆயிரம் மெற்றிக் தொன் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டதுடன், 11ஆயிரம் மெற்றிக் தொன், கொலன்னாவையிலும் களஞ்சியப் படுத்தப்பட்டது.

அதேபோன்று 6500 மெற்றிக் தொன் பெற்றோலும் கொண்டு வரப்பட்டது. கொலன்னாவையில் களஞ்சியப்படுத்தப்பட்ட இந்த இரண்டையும் பரிசோதித்ததில் பெற்றோல் தரமானதாக இருந்தது. ஆனால், டீசல் தரமற்றதென நிரூபணம் ஆனது. இரண்டுமுறை பரிசோதித்தும் அது தரமற்ற டீசல் என்றே முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

அதனால் டீசல் பெறுவதை நாம் நிராகரித்தோம். ஆனால், சீன துறைமுகத்துக்கு சென்ற 20ஆயிரம் மெற்றிக் தொன் டீசலுக்கு என்ன நடந்தது. அவை தொடர்பில் பரிசோதனைகள் எங்கு இடம்பெறுகின்றன எனத் தெரியவில்லை.

நாடு முழுவதும் தரமற்ற எரிபொருள் விற்பனை செய்யப்படுகின்றன. அரச பலத்துடன்தான் தரமற்ற எரிபொரள் நாட்டுக்குள் இவ்வாறு கொண்டுவரப்படுகிறது-என்றார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# 6 பந்துகளில் 6 விக்கெட் கைப்பற்றி சாதனை!

அவுஸ்ரேலியாவின் கோல்ட் கோஸ்டின் பிரீமியர் லீக் பிரிவு கிரிக்கெட் போட்டியில், அணி ஒன்று இறுதி ஓவரில் 6 விக்கெட்டுக்களை கைப்பற்றி போட்டியில் வெற்றி பெற்று சாதனைப் படைத்துள்ளது.

முட்கீரபா அணிக்கு எதிரான போட்டியில் சேர்ஃபர்ஸ் பெரடைஸ் அணிக்கு, 179 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் 179 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பாடிய சேர்ஃபர்ஸ் பெரடைஸ் அணிக்கு இறுதி ஓவரில் 6 விக்கெட்டுகள் கைவசம் இருக்க 5 ஓட்டங்கள் மாத்திரமே தேவைப்பட்டன.

எனினும் முட்கீரபா அணித்தலைவர் கரேத் மோர்கன், இறுதி ஓவரின் ஆறு பந்துகளில் 6 விக்கெட்டுகளை வீழ்த்தி வரலாற்றில் சாதனை வெற்றியை பதிவு செய்துள்ளார்.

குறித்த 6 விக்கெட்டுக்களில் 4 விக்கெட்டுகள் பிடி எடுக்கப்பட்டும், இருவர் போல்ட் முறையிலும் ஆட்டமிழக்கச் செய்யப்பட்டனர்.

முன்னதாக தொழில்முறை கிரிக்கெட்டில் ஒரே ஓவரில், 5 விக்கெட்களை கைப்பற்றி தமது அணிக்கு வெற்றிகளை பெற்றுக்கொடுத்தவர்கள் பட்டியலில், 2011ஆம் ஆண்டில் நீல் வாக்னரும், 2013 ஆம் ஆண்டில் பங்களாதேஷின் அமின் ஹூசைனும், இந்திய கர்நாடக அணியின் அபிமன்யு மிதுன் ஆகியோரும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



(அ)

# கார்லோஸ் அல்கரஸ் தோல்வி



உலக டென்னிஸ் தர வரிசையில் முதல் 8 இடங்களில் இருக்கும் வீரர்கள் பங்கேற்ற ஏடிபி பைனல்ஸ் எனப்படும் ஆடவர் ரென்னிஸ் தொடர் தற்போது விறுவிறுப்பாக இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் இத்தாலியின் டுரினில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டி ஒன்றில் விம்பிள்டன் சம்பியனான கார்லோஸ் அல்கரஸ் தோல்வியடைந்தார்.

அதன்படி ஜேர்மனியின் அலெக்சாண்டர் ஸ்வெரேவை எதிர்கொண்ட 20 வயதான ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கரஸ் 6-7, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்தார்.

இதேவேளை மற்றுமொரு போட்டியில் உலகின் முதல்நிலை வீரரான நோவக் ஜோகோவிச், டென்மார்க் வீரர் ஹோல்கர் ரூன்னை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் முதல் செட் டை பிரேக் வரை நீடிக்க அதனை 7-6 என நோவக் ஜோகோவிச் கைப்பற்ற அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் விளையாடிய ஹோல்கர் ரூன் அடுத்த செட்டை 7-6 என கைப்பற்றி சமநிலைப்படுத்தினார்.

இதனை அடுத்து வெற்றியை தீர்மானிக்கும் இறுதி செட்டை 6-3 என கைப்பற்றி உலகின் முதல்நிலை வீரரான நோவக் ஜோகோவிச் வெற்றிபெற்றார்.

இதேநேரம் ரெட் குரூப் ஒற்றையர் ஆட்டத்தில் மூன்றாம் நிலை வீரரான டானில் மெட்வெடேவ் 6-4 6-2 என்ற செட் கணக்கில் சக ரஷ்ய வீரரான ஆண்ட்ரே ரூப்லேவை வீழ்த்தி வெற்றிபெற்றார்.

# குற்றச்சாட்டுக்களை நிராகரித்த பிரமோதய



இலங்கை கிரிக்கெட் தெரிவுக்குழுவினருக்கு எதிராக கடந்த இரண்டரை வருடங்களாக முன்வைக்கப்பட்டு வந்துள்ள குற்றச்சாட்டுகள் உண்மைக்கு புறம்பானவை என தெரிவுக்குழுவின் தலைவர் பிரமோதய விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகள் உண்மைக்கு புறம்பானவை பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கத்தை கொண்டவை என அவர் தெரிவித்துள்ளார்

இலங்கை கிரிக்கெட்டை வீழ்ச்சியடையச்செய்வதை நோக்கமாக கொண்டு இந்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.இலங்கை கிரிக்கெட்டில் அதிகாரத்திற்காக முயலும் சிலர் சூதாட்ட சிலர் மற்றும் தேசிய அணிக்குள் நுழைய முயலும் சிலர் குறித்து தெரிவுக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை கிரிக்கெட்டின் அவலநிலைக்கு நீண்டகாலமாக முன்னெடுக்கப்படும் சதிதிட்டம் காரணம் என நான் நம்புகின்றேன் தெரிவித்துள்ள அவர் இலங்கை கிரிக்கெட் மீது விதிக்கப்பட்ட தடைக்கும் இந்த சதியே காரணம் என கருதுவதாக தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றவே இந்த சதிகள் இடம்பெறுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ள அவர் ஆனால் இந்த தரப்பினர் கிரிக்கெட்டை காப்பாற்ற முயல்வது சமூகத்தை திறமையாக தவறான விதத்தில் வழிநடத்துகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

(அ)



# அதிகாலை 3 மணிக்கு தெருவோர மக்களுக்கு உதவிய ஆப்கன் வீரர்

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் விக்கெட் கீப்பர் ரஹ்மானுல்லா குர்பாஸ் அதிகாலை 3 மணிக்கு அகமதாபாத் நகரத்தில் தெருவோரத்தில் வசிக்கும் மக்களுக்கு உதவிய காட்சிகள் வைரலாகி வருகின்றன.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி நிர்வாகம் இந்த வீடியோ தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ளது. அந்த வீடியோவில், ரஹ்மானுல்லா குர்பாஸ் அதிகாலை 3 மணிக்கு அகமதாபாத் நகரத்தில் தெருவோரத்தில் தூங்கிக் கொண்டிருந்த மக்களுக்கு அவர்களுக்கு தெரியாமலேயே ரூ.500 பணத் தாள்களை அவர்கள் அருகில் போட்டுவிட்டுச் செல்கிறார். இந்த வீடியோவை பகிர்ந்த கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி அதில், “இந்த மாத தொடக்கத்தில் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பணம் திரட்டுவதற்காக அயராமல் உழைத்துவரும் வேளையிலும் வெளிநாட்டில் ரஹ்மானுல்லா காட்டிய இந்த கருணை எங்கள் அனைவரையும் ஊக்குவிக்கிறது. கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக, ஜானி” என்றும் பதிவிட்டுள்ளது. இந்த வீடியோ தற்போது வைரலாக பரவிவருகிறது.

# அமெரிக்க பிரீமியர் லீக் தொடரில் பானுக ராஜபக்ஷ



அமெரிக்க பிரீமியர் லீக் இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடருக்கான ஒப்பந்தத்தில் இலங்கை அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான பானுக ராஜபக்ஷ கையெழுத்திட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவரைத் தவிர, குறித்த தொடருக்கான அழைப்பிதழ் அஞ்சலோ மெத்யூஸிற்கும் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், பாகிஸ்தானின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் அமீர் உட்பட பல வீரர்கள் இந்த தொடருக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

# உலகக் கிண்ணத்தை வெல்ல இந்தியாவிற்கு அதிக வாய்ப்பு



உலகக் கிண்ணத்தை வெல்ல இந்திய கிரிக்கெட் அணிக்கு பிரகாசமான வாய்ப்பு உள்ளது என்று இந்திய அணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் தலைமைப் பயிற்சியாளருமான ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை தற்போது உலக கிண்ணத்தை இந்திய அணி வெல்லாவிட்டால், இன்னும் 2 அல்லது 3 உலக கிண்ணங்கள் வரை நாம் காத்திருக்க வேண்டும்.

மேலும் இந்திய அணியில் தற்போது விளையாடிக் கொண்டிருக்கும் அனைவரும் ஒருங்கிணைந்து விளையாடி வருவது இந்திய அணிக்கு சிறப்பான அம்சமாக உள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 30,000 வீரர்கள் காஸாவை இரண்டாக பிளந்தும் கைமீறும் நிலைமை!

# இஸ்ரேல் என்ன செய்யப் போகிறது?

ஜொனாதன் பீல்

காஸாவில் இஸ்ரேல் தனது வான்வழித் தாக்குதலை ஆரம்பித்து ஒரு மாதத்திற்கும் மேல் ஆகி விட்டது. தரை வழித் தாக்குதலை ஆரம்பித்தும் இரண்டு வாரங்கள் கடந்துவிட்டன.

அக்டோபர் 7ஆம் தேதி முதன்முதலில் காஸாவில் உள்ள ஹமாஸ் ஆயுதக்குழு இஸ்ரேல் மீது நடத்திய கொடூரமான தாக்குதலில் இருந்துதான் இதெல்லாம் தொடங்கியது. அந்த தாக்குதலில் மட்டும் 1,400க்கும் மேற்பட்ட இஸ்ரேல் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலின் இலக்கானது ஆரம்பம் முதலே தெளிவாக உள்ளது. ஹமாஸ் இயக்கத்தை ராணுவம் மற்றும் அரசியல் ரீதியாக துடைத்தெறிவதுதான் அதன் நோக்கம்.

இந்நிலையில், காஸாவுக்குள் புகுந்த இஸ்ரேல் ராணுவம் எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது? தனது இலக்கை அடைவதில் இஸ்ரேல் எவ்வளவு தூரம் வந்திருக்கிறது மற்றும் அதனால் இந்த இலக்கை அடைய முடியுமா?

இஸ்ரேலை பொறுத்தவரை, இந்த தாக்குதல் நடவடிக்கை அவ்வளவு எளிதில்லை என்றும் இது நீண்ட நாட்களுக்கு நீடிக்க கூடியது என்றும் மீண்டும் மீண்டும் சொல்லி கொண்டிருக்கிறது.

எம்முடன் பேசிய மூத்த இஸ்ரேல் ராணுவ அதிகாரி, தற்போதைய நிலையை குத்துச்சண்டை போட்டியோடு ஒப்பிட்டு விளக்கியுள்ளார். 15 சுற்று போட்டியில் தாங்கள் இப்போது 4ம் சுற்றில் இருப்பதாக அவர் கூறுகிறார்.

இஸ்ரேலை சேர்ந்த யாராலுமே இந்த போர் எவ்வளவு காலம் நீடிக்கும் என்று சொல்ல முடியவில்லை. சிலர் மேற்கத்திய ஆதரவு ஈராக் ராணுவம் மற்றும் ஐ.எஸ். இயக்கத்திற்கு இடையே நடைபெற்ற சண்டையை மேற்கோள் காட்டுகின்றனர். அதன்படி, 2017ம் ஆண்டு ஐ.எஸ்.ஸிடமிருந்து மொசூலை மீண்டும் கைப்பற்ற ஈராக் ராணுவத்திற்கு 9 மாதங்கள் தேவைப்பட்டதை உதாரணமாக கூறுகின்றனர்.

அதே சமயம், சர்வதேச அளவில் சண்டை நிறுத்தம் அல்லது போர் நிறுத்தம் செய்யக்கோரி அழுத்தம் அதிகரித்து வருவதால் நீண்ட காலத்திற்கு இஸ்ரேலாலும் இந்த சண்டையை நடத்த முடியாது.

### காஸாவை சுற்றி வளைத்துள்ள இஸ்ரேல் ராணுவம்

காஸாவில் இஸ்ரேல் ராணுவம் அக்டோபர் 7ஆம் தேதியில் இருந்து நடத்திய தாக்குதல்களில் இதுவரை குறைந்தபட்சம் 11,078 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்



கள்.

தரைவழித் தாக்குதல்களை இஸ்ரேல் ராணுவம் அக்டோபர் 27ஆம் தேதி முதல் தீவிரப்படுத்தியுள்ளது. அதே நாளில் காஸாவிற்குள் நுழைந்த இஸ்ரேல் ராணுவம் வடக்குப் பகுதியில் சண்டையிட்டு வருகிறது. காஸாவின் வடக்குப் பகுதியில் மக்கள் அதிகம் வாழும் கடற்கரையை ஒட்டிய பகுதியை இஸ்ரேல் ராணுவம் இரண்டாகப் பிரித்துள்ளது.

இஸ்ரேல் ராணுவ அதிகாரி ஒருவர் கூறுகையில், இந்தப் பகுதியில் இஸ்ரேல் ராணுவம் முன்னேறியபோது அங்கிருந்த மக்களை தெற்குப் பகுதியை நோக்கிச் செல்ல கூறியிருந்ததாகவும் இஸ்ரேல் ராணுவம் வடக்கு காஸாவை சுற்றி வளைத்தபோது அனைத்து மக்களும் தெற்குப் பகுதிக்கு சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார்.

காஸா நகரப் பகுதியில் உள்ள அல்-ஷிஃபா மருத்துவமனை அமைந்திருக்கக்கூடிய பகுதியில் இஸ்ரேல் ராணுவம் முன்னேறி ஹமாஸ் ஆயுதக்குழுவினரோடு சண்டையிட்டு வருகின்றனர். அல் ஷிஃபா மருத்துவமனை காஸாவின் வடக்குப் பகுதி கடலோரத்தில் அமைந்துள்ளது. இந்த மருத்துவமனையைச் சுற்றி இஸ்ரேலும் ஹமாஸும் சண்டையிட்டு வருகின்றனர்.

### காஸாவிலேயே பெரிய மருத்துவமனையை தாக்கிய இஸ்ரேல்

காஸாவிலேயே பெரிய மருத்துவமனையான அல் ஷிஃபாவில் இருக்கும் குழந்தைகள் மற்றும் நோயாளிகள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர். அல் ஷிஃபா மருத்துவமனையில் இருக்கும் 37 குழந்தைகள் உட்பட 100 நோயாளிகள் உள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் உலக சுகாதார மையம் கூறுகையில், இந்த மருத்துவமனையோடு தங்களுக்கு இருந்த அனைத்து தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

அல் ஷிஃபா மருத்துவமனையில் இருந்து 100மீட்டர் தூரத்தில் இஸ்ரேலின் ராணுவ டாங்கிகள் ஹமாஸ் மீது தாக்குதலில் ஈடுபட்டிருந்ததாக அல் ஷிஃபா மருத்துவமனையில் இருந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

அல் ஷிஃபா மருத்துவமனையில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அதில் இரண்டு பேர் குழந்தைகள் என்றும் ஹமாஸ் தெரிவித்துள்ளது. ஹமாஸ் ஆயுதக் குழுவால் நடத்தப்படும் சுகாதார அமைச்சகம் கூறுகையில் இஸ்ரேல் ராணுவத்தின் தாக்குதலில் அல் ஷிஃபா மருத்துவமனையின் பிரசவ அறைகள் இருக்கும் பகுதி உட்பட பல பகுதிகள் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் ராணுவம் அல் ஷிஃபா மருத்துவமனை மீது நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து உலக அளவில் இஸ்ரேல் மீது அழுத்தம் அதிகமாகியுள்ளன.

### இரண்டு பக்கமும் பேரிழப்பு

இதுவரை பதினான்காயிரத்திற்கும் மேற்பட்ட தாக்குதல்களை நடத்தி அதில் ஹமாஸின் மூத்த தளபதிகள் உட்பட டஜன் கணக்கான இலக்குகளை வீழ்த்தியுள்ளதாக அறிவித்துள்ளது இஸ்ரேல். ராணுவ நிபுணர் மற்றும்



ஜெருசலேம் போஸ்ட் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரான யாகோவ் காட்ஸ், இஸ்ரேல் இதுவரை இருபத்தி மூன்றாயிரத்திற்கும் அதிகமான குண்டுகளை வீசியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

ஈராக் மொசூலில் நடைபெற்ற போரின் கடைசி நேரத்தில் கூட மேற்கு நாடுகளின் கூட்டணி படைகள் ஐஎஸ் கட்டுப்பாட்டு பகுதிகளில் ஒரே வாரத்தில் 500 குண்டுகளை வீசியது குறிப்பிடத்தக்கது.

ஹமாஸ் அளித்துள்ள தகவலின்படி, போர் தொடங்கியதில் இருந்து இதுவரை காஸாவில் 10,800 மக்கள் உயிரிழந்துள்ளனர். அதில் 4,400 குழந்தைகளும் அடங்குவார்கள்.

இந்நிலையில் இஸ்ரேல் ராணுவம் வெற்றிகரமாக காஸாவை தெற்கு மற்றும் வடக்கு என பிரித்து விட்டதாகவும், காஸா நகரம் முழுவதையும் அதன் படை சுற்றிவளைத்துள்ளதாகவும் கூறி வருகிறது.

தற்போது அவர்கள் நகரத்தின் மையப்பகுதி வரை வலுவாக ஊடுருவியுள்ளதாக கூறுகின்றனர். ஆனாலும் கூட இன்னும் காஸா முழுவதும் கட்டுப்பாட்டுக்குள் வந்ததாக அவர்களால் அறிவிக்க முடியவில்லை.

அதே சமயம் மறுபுறம், இஸ்ரேல் ராணுவம் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளதாகவோ அல்லது காஸாவுக்குள் தீவிரமாக ஊடுருவியுள்ளதாகவோ தெரியவில்லை என ஹமாஸ் மறுத்துள்ளது.

இஸ்ரேல் ராணுவம் ஹமாஸை தனிமைப்படுத்தும் இலக்கோடுதான் தனது தரைவழி தாக்குதலை திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. இதனால் ஹமாஸ் இயக்கத்திற்கு பெரும் இழப்பு ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

போர் தொடங்கியபோது ஹமாஸ் இயக்கத்தில் 30 முதல் 40 ஆயிரம் வரை வீரர்கள் இருக்கலாம் என்று மதிப்பீடு செய்யப்பட்டது. அதில் 10 சதவீதம் அல்லது 4,000 வீரர்கள் தற்போது வரை கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. இருப்பினும், இது போன்ற கணக்கீடுகளை சரிபார்ப்பது சாத்தியமற்றது.

இருப்பினும், ஏற்கனவே காஸா மீது இஸ்ரேலின் கடுமையான குண்டு வீச்சு தாக்குதலினால் ஹமாஸின் போர்த்திறன் பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், மறுபுறம் இஸ்ரேலிய ராணுவமோ குறைந்த இழப்புகளையே பெற்றுள்ளதாக தெரிகிறது. தரைவழி

(16ம் பக்கம் பார்க்க)



# தேசிய நலனுக்காக தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமையளித்தல்



கலாநிதி ஜெகான் பெரேரா

கொழும்பு துறைமுகம் இந்து சமுத்திரத்தில் சந்தடிமிக்க மிகப்பெரிய கப்பல்போக்குவரத்து துறைமுகமாகும். 2021 ஆம் ஆண்டில் இருந்து 90 சதவீதத்துக்கும் அதிகமான பயன்பாட்டில் அது இயங்கிவருவது மேலதிக ஆற்றலுக்கான தேவை அதற்கு இருப்பதை உணர்த்துகிறது.

கொழும்பு துறைமுகத்தில் அமெரிக்க அரசாங்கத்தின் 55 கோடி 30 இலட்சம் டொலர்கள் முதலீடு பெரும் அதிர்ச்சியாக வந்திருக்கிறது. நாட்டின் மிகுந்த கேந்தர முக்கியத்துவ சொத்துக்களில் ஒன்றில் இந்தளவு பாரிய முதலீடு செய்யப்படுவது குறித்து பொதுவெளியில் எதுவும் தெரியாது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தின் கட்டுப்பாட்டை பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க - ஜப்பானிய - இந்திய கூட்டுமுயற்சி தொழிற்சங்கங்களின் எதிர்ப்பினால் தடுக்கப்பட்டதற்கு பிறகு இந்தியாவின் அதானி குழுமத்துக்கு கொடுக்கப்பட்ட மேற்கு முறையத்திலேயே இந்த அமெரிக்க மூதலீடு செய்யப்படும்.

புதிய முகாமைத்துவம் ஒன்றின் கீழ் தொழிலாளர்களை கொண்டுவருவதை தாங்கள் விரும்பவில்லை என்ற நிலைப்பாட்டை தொழிற்சங்கங்கள் எடுத்தன. ஆனால், கொழும்பு துறைமுகத்தின் முக்கிய முனையம் ஒன்றின் கட்டுப்பாட்டை சீனா கொண்டிருப்பதால் எதிர்ப்புகளின் பின்னணியில் புவிசார் அரசியலின் கை இருந்தது என்று நம்பப்பட்டது.

வங்காள விரிகுடாவில் வளர்ச்சியடையும் பொருளாதாரங்களின் தேவைகளுக்கு புதிய முனையம் உதவும் என்று கூறப்படுகிறது. விரிவடையும் இந்த சந்தைகளுக்கு அண்மித்தாகவும் முக்கியமான கப்பல் போக்குவரத்து மார்க்கங்களுக்கு நெருக்கமாகவும் இலங்கையின் அமைவிடம் இருப்பதை அனுகூலமாக பயன்படுத்துவதே நோக்கம்.

தெற்காசியப் பிராந்தியத்துக்கான முக்கிய உட்கட்டமைப்பை வழங்கக்கூடியதாக கொழும்பு துறைமுகத்தில் ஆழ்கடல் கப்பல் கொள்கலன் முனையம் ஒன்றை விருத்தி செய்வதற்கு ஆதரவாக 50 கோடிக்கும் அதிகமான டொலர்களை வழங்க உறுயளித்திருப்பதாக அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் (**US International Development Finance Corperation - DFC**) அறிவித்திருக்கிறது.

இலங்கை உலகின் மிகவும் முக்கியமான இடைத்தரிப்பு மையமாக விளங்குகிறது. அதன் கடற்பரப்பின் ஊடாக சகல கொள்கலன் கப்பல் இடைத்தரிப்பு போக்குவரத்தில் அரைவாசி இடம்பெறுகிறது என்று அந்த அமெரிக்க கூட்டுத்தாபனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஸ்கொட் நாதன் கூறினார். மேற்கு கொள்கலன் முனையத்துக்காக - அரசாங்க கடனுடன் சேராத வகையில் - தனியார்துறை கடனாக கூட்டுத்தாபனம் வழங்கும் 55 கோடி 30 இலட்சம் டொலர்கள் அந்த முனையத்தில் கப்பல்போக்குவரத்து ஆற்றலை விரிவுபடுத்தி இலங்கைக்கு பெரும் சுபிட்சத்தை கொண்டுவரும் அதேவேளை பிராந்தியத்தில் உள்ள அமெரிக்க நேசநாடுகளின் நிலையையும் பலப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு துறைமுகத்தில் அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தினால் செய்யப்படும் முதலீடு (இது குறித்து பொதுவெளியில் பெரிதாக தெரியாது) இலங்கையின் பொருளாதாரம் தொடர்ச்சியான எதிர்மறை வளர்ச்சியுடன் தடுமாறிக்கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் அதற்கு ஒரு பெரிய ஊக்கமாக அமையும்.

ஆனால், கடந்த சில வருடங்களாக குறிப்பாக பொருளாதார வீழ்ச்சிக்கு பிறகு நாட்டில் பெரிய நேரடி வெளிநாட்டு முதலீடு கிட்டத்தட்ட முற்றாக இல்லாமல் இருக்கும் நிலைக்கு ஒரு ஆறுதலாக இந்த கூட்டுத்தாபனத்தின் முதலீடு அமைவது சாத்தியமில்லை. கொழும்பு துறைமுகத்தில் இந்த நேரடி வெளிநாட்டு முதலீடு வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றினால் அல்ல தனியார்துறை கம்பனி ஒன்றினாலேயே செய்யப்படுகிறது என்பது கவனிக்கத்தக்கது.

அப்பிள் மற்றும் மைக்ரோசொஃப்ற் போன்ற அமெரிக்க கம்பனிகள் அபிவிருத்தியடைந்துவரும் உலகின் ஏனைய பாகங்களில் முதலீடுகளைச் செய்கின்றன. ஆனால் இலங்கையில் அவை அவ்வாறு செய்யவில்லை.

அரசியல் உறுதிப்பாடின்மை, உயர்மட்ட அதிகாரிகளின் நடவடிக்கைகளின் விளைவான முட்டுக்கட்டைகள் மற்றும் ஊழல் ஆகியவை இலங்கையில் தனியார்துறை முதலீடுகளுக்கு ஒரு இடையூறாக இருக்கின்றன. இலங்கை கம்பனிகளும் கூட அவற்றின் வளங்களை வேறு நாடுகளில் முதலீடு செய்கின்றன.

## தேசிய நலன்கள்

2009 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பிறகு அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு கமிட்டியைச் சேர்ந்த ஒரு ஆய்வுக்குழு இலங்கைக்கு விஜயம் செய்தது. 'போருக்கு பின்னர் அமெரிக்க மூலோபாயத்தை மீளவகுத்தல்" என்ற தலைப்பில் அந்த கமிட்டி அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது. இந்த இரு கட்சிகளின் ஒத்துழைப்புடனான கமிட்டிக்கு (**Bipartisan Committee**) முன்னர் தலைமை வகித்த இரு அமெரிக்க செனட்டர்களை கௌரவிக்குமுகமாக அது கெறி - லூகர் அறிக்கை என்று பெயரிடப்பட்டது.

இலங்கையில் வெளியுறவுக்கொள்கை இடைக்கால அணுகுமுறைகளின் அடிப்படையில் பெரும்பாலும் ஜனாதிபதியின் அல்லது அமைச்சரினால் கையாளப்படுவதே வழக்கமாக இருக்கிறது. ஆனால் இதற்கு முற்றிலும் மாறான வகையில் மிகவும் வளர்ச்சியடைந்த நாடுகளில் வெளியுறவுக் கொள்கை இரு தரப்பு கருத்துப்பரிமாறலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது.

இந்து சமுத்திரத்தின் ஊடாக கடல் மார்க்கங்களை பாதுகாத்துக்கொள்வதில் இந்தியர்களுக்கும் சீனர்களுக்கும் இருப்பதைப் போன்று அமெரிக்காவுக்கும் நலன்கள் உள்ளன. இலங்கையை இழப்பது அமெரிக்காவுக்கு கட்டுப்படியாகாது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டது.



மறுபுறத்தில், இஸ்ரேலிய - பாலஸ்தீன நெருக்கடியில் மேற்குலகின் அணுகுமுறை தங்களது முகாமின் பகுதியாக அமையாதவை என்று கருதப்படுகின்ற நாடுகளில் ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் நல்லாட்சியையும் மேற்குலக நாடுகளின் தேசிய நலன்கள் நசித்துவிடும் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரிட்டிஷ் பிரதமராக இருந்த பால்மேர்ஸ்டன் பிரபு பாராளுமன்றத்தின் மக்கள் சபையில் உரையாற்றிய போது "நிலையான நேச அணிகள் எமக்கு கிடையாது. என்றென்றைக்குமே எதிராளிகள் என்றும் எமக்கு எவரும் கிடையாது. எமது நலன்களே நிலையானவை. என்றென்றைக்குமானவை. அந்த்நலன்களைப் பாதுகாப்பதே எமது கடமை" என்று கூறினார்.

நாடுகளுக்கு நிரந்தர நண்பர்கள் இல்லை. அவற்றுக்கு நிரந்தர நலன்கள் மாத்திரமே இருக்கின்றன என்ற யதார்த்தத்தை மறந்துவிடாமல் இருப்பது முக்கியமானது. இலங்கையைப் பொறுத்தவரையிலும் கூட இதுவே உண்மை. தேசிய நலன்களே முதல் முக்கியமானவை என்பதை மனதிற்கொண்டு இலங்கையின் வெளியுறவுக்கொள்கை வகுக்கப்படவேண்டியது அவசியம்.

கேள்விக்கிடமான ஒரு ஆணையுடன் முன்னென்றும் இல்லாத பொருளாதாரப் பிரச்சினைகள் மக்களின் எதிர்ப்புக்கு அரசாங்கம் முகங்கொடுக்கவேண்டியிருக்கும் பின்புலத்தில் இலங்கையை மேற்குலகின் செல்வாக்கு வலயத்திற்குள் இழுக்கும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. மேற்குலக நாடுகள் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சி கோட்பாடுகளுக்காக குரல் கொடுப்பவை. இந்த விழுமியங்களை மீளநிலைநிறுத்துவதற்கு அரசாங்கத்தின் எதிர்ப்புக்கு மத்தியில் இலங்கைக்கு வெளியாதரவு தேவை.

மேற்குலக நாடுகள் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு மிகவும் செல்வாக்கான சந்தைவாய்ப்புக்களை வழங்குகின்றன. ஜனநாயக செயன்முறைகள் தடம்புரளக்கூடிய சாத்தியம் குறித்து விசனம் கொண்டிருக்கும் அரசியல் எதிரணியும் சிவில் சமூகமும் இந்த சந்தர்ப்பத்தை கருத்தில் எடுக்கவேண்டியது அவசியமாகும். இலங்கையின் தேசிய நலனின் அடிப்படையில் பொருளாதாரத்துக்கு பெறுமதி சேர்க்கக்கூடிய எந்தவொரு வெளிநாட்டுடனுமான வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளை முன்னெடுப்பதற்கு சுதந்திரத்தை கொண்டதாக வெளியுறவுக் கொள்கையின் கோட்பாடு அமையவேண்டும் என்பதை எதிரணியும் சிவில் சமூகமும் மனதிற்கொள்ள வேண்டும்.

## பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்தல்

இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா, சீனா மற்றும் இந்தியாவை விடவும் பெரிய வல்லாதிக்க நாடுகள் இல்லை. அவற்றின் நடுவில் இலங்கை ஒரு சிறிய மீன். அதனால் அந்த வல்லரசுகளுடன் விவகாரங்களை கையாளுவதில் இலங்கை தெளிவான ஒரு கொள்கையைக் கொண்டிருககவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

இந்த மூன்று வல்லாதிக்க நாடுகளுக்கும் இலங்கையின் புவிசார் அரசியல் அமைவிடம் முக்கியமானது என்பது தெளிவானது. அதன் காரணத்தினால்தான் அவை இலங்கையில் வெவ்வேறு வழிகளில் முதலீடுகளைச் செய்திருக்கின்றன.

அண்மைய கடந்த காலத்தில் இலங்கைக்கு மிகப்பெரிய உதவிகளைச் செய்யும் நாடாக இந்தியா வெளிக்கிளம்பியிருக்கிறது. இலங்கை எந்தவொரு புதிய கடனையும் பெறமுடியாமல் சர்வதேச ரீதியில் வங்குரோத்து நிலையை அடைந்து படுமோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியபோது 400 கோடி டொலர்கள் அவசரகால கடனுதவியை இந்தியா வழங்கியது.

அதற்கு முன்னதாக இலங்கைக்கு போரின்போது பணத்தையும் ஆயுதங்களையும் வழங்கிய அதேவேளை போருக்கு பிறகு உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக பெருமளவு முதலீடுகளையும் செய்து மிகப்பெரிய உதவி வழங்கும் நாடாக சீனா விளங்கியது.

முன்னொருபோதும் இல்லாத வகையிலான ஊழல் பேர்வழிகளான தலைவர்களின் உடந்தையுடன் முன்னெடுக்கப்பட்ட இந்த உட்கட்டமைப்பு திட்டங்கள் எதிர்பார்த்த பயன்களை தரவில்லை. தற்போதைய பொருளாதார இடர்நிலை யையும அவை துரிதப்படுத்தின.

சீனக்கப்பலின் அண்மைய வருகை இலங்கைக்கு இரண்டும் கெட்டான் நிலையை ஏற்படுத்தியது. அந்த கப்பலை இந்தியா உளவுக்கப்பல் என்று கூறிய அதே வேளை சீனா ஆய்வுக்கப்பல் என்றது. இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு உரிய கவனிப்பு கொடுக்கப்படவேண்டும் என்பதே நடைமுறை யதார்த்தமாகும். இது கடந்தகால படிப்பினையில் இருந்து பிறந்த அவதானிப்பு ஆகும்.

1980களில் இலங்கை மேற்குலகின் ஆதரவுடன் பொருளாதார முன்னேற்றத்தை தொடங்கிய பயணத்தை இலங்கை தொடங்கியபோது மேற்குலகுடன் அது நெருங்கிச் செல்கிறது என்று இந்தியா கருதியது. திருகோணமலையில் அமெரிக்கா கடற்படைத்தளம் ஒன்றை அமைக்கப்போகிறது என்ற பேச்சுக்களும் அடிபட்டன.

அதன் பிறகு மூன்று தசாப்தகால உள்நாட்டுப்போரில் இலங்கை சிக்கிக்கொண்டது. தமிழ் கிளர்ச்சியாளர்களுக்கு இந்தியா ஆயுதம் வழங்கி பயிற்சி அளித்தது. இதனால் தென்கொரியா, தாய்வான், மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற தென்கிழக்காசியாவின் பொருளாதார வளர்ச்சி நாடுகளுடன் இலங்கை இணைவதற்கு இருந்த சிறந்த வாய்ப்பு இல்லாமல் போனது.

இலங்கையிலும் அதன் கடற்பரப்பிலும் இடம்பெற்றவை அயல்நாடான இந்தியாவின் பாதுகாப்பை பெரிதும் பாதித்தது. 2 கோடி 20 இலட்சம் சனத்தொகையைக் கொண்ட ஒரு நாட்டினால் தனது பாதுகாப்பும் நல்வாழ்வும் ஆபத்துக்குள்ளாவதை 120 கோடி சனத்தொகையைக் கொண்ட ஒரு நாடு அனுமதிக்கப்போவதில்லை.

அதனால் இலங்கை அதன் வெளியுறவுக்கொள்கையைக் கையாளும்போது நெருங்கிய அயல்நாட்டின் தேசிய பாதுகாப்பு அக்கறைகளுக்கு முன்னுரிமை அவதானிப்பை செலுத்தவேண்டியது நியாயமானதாகும். எந்தவொரு நாட்டினதும் முதல் முன்னுரிமை அதன் தேசிய பாதுகாப்பை உறுதிசெய்வதேயாகும்.

அதன் காரணத்தினால்தான் போர்க்காலத்தில் இந்தியாவின் அக்கறைகளுக்கு மத்தியிலும் பொருளாதார உதவியையும் ஆயுதங்களையும் பெறுவதற்கு இலங்கை சீனாவையும் பாகிஸ்தானையும் நாடியது.

ஆனால் தேசிய பாதுகாப்பு அக்கறைகள் நியாய பூர்வமானவையாகவும் உண்மை என்று நிரூபிக்கப்படக் கூடியவையாகவும் காண்பிக்கப்படவேண்டியவையாக இருக்கின்றன. இதை தீர்மானிக்கும் பொறுப்பை அதிகாரத்தில் உள்ள ஊழல்தனமான தலைவர்களிடம் விட்டுவிட முடியாது. பல கட்சிகளை உள்ளடக்கிய ஒரு செயன்முறையில் எதிரணியையும் சிவில் சமூகத்தையும் சேர்த்து அந்த பொறுப்பான பணி முன்னெடுக்கப்படவேண்டும்.

●

# 30,000 வீரர்கள் காஸாவை...

(14ம் பக்கத் தொடர்ச்சி)



தாக்குதல் தொடங்கியதிலிருந்து இதுவரை 34 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக கூறியுள்ளது இஸ்ரேல்.

பெரும் இழப்புகளை தவிர்ப்பதற்காகவே இஸ்ரேல் ராணுவம் தனது தரைவழி நடவடிக்கைகளை மிக கவனமாக கையாள்வதாக இஸ்ரேல் உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு நிபுணர் யோசி குபர்வாசர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் இன்னும் எவ்வளவு ஹமாஸ் இயக்கத்தினர் வடக்கு காஸாவில் இருக்கிறார்கள் அல்லது எவ்வளவு வீரர்கள் சுரங்கங்களில் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள் அல்லது தெற்கு நோக்கி எவ்வளவு பேர் சென்றிருக்கலாம் என்று சரியாக தெரியாத சூழலே நிலவுகிறது.

காஸாவின் சுரங்கங்கள் இன்னமும் இஸ்ரேலுக்கு பெரும் சவாலாகவே இருந்து வருகின்றன. சண்டையின் போது சுரங்கங்களில் மாட்டி கொள்ளாமல் இருப்பதற்காக இஸ்ரேல் படைகள் தாங்கள் கண்டறியும் சுரங்கங்களை வெடி வைத்து தகர்த்தெறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

**நகரங்களில் போர் புரிவதில் சவால்கள்**

உளவுத்துறை மற்றும் ராணுவம் ஆகியவற்றின் திறன் அடிப்படையில் இஸ்ரேலின் முன்னிலை தெளிவாக உள்ளது. இதனால், காஸாவின் மொபைல் போன் மற்றும் இன்டர்நெட் நெட்வொர்க் அனைத்தையும் முடக்க முடியும்.

இஸ்ரேலின் அதிநவீன விமானப்படை அதன் போர் விமானங்கள் மற்றும் டிரோன்கள் மூலம் தரையில் என்ன நடக்கிறது என்பதை துல்லியமாக கண்காணிக்கும் திறன் கொண்டவை. ஆனால், அவற்றால் பூமிக்கு அடியில் என்ன நடக்கிறது என்பதை பார்க்க முடியாது.

இன்னமும் கூட தினமும் 100 புதிய தாக்குதல் இலக்குகளை கண்டறிவதாக மூத்த இஸ்ரேலிய பாதுகாப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த போர் எவ்வளவு தூரம் இழுத்து கொண்டே போகிறதோ, அதே போல் இந்த பட்டியலும் குறையாமல் சென்று கொண்டே இருக்கிறது. ஆனால், எவ்வளவு காலத்திற்கு இந்த போர் தொடரும் வரை, எதிரிகளை கண்டறிந்து வீழ்த்துவதற்கு அதிகம் தரைப்படையினரையே நம்பியிருக்கும் சூழல் உள்ளது.

இஸ்ரேலிய படைகள் நன்கு பயிற்சி பெற்றவர்கள் என்ற போதும், நகர்ப்புறங்களில் போர் புரிவது அவர்களுக்கு சிக்கலானதாக இருக்கலாம். இஸ்ரேல் இது வரை தரைப்பகுதியில் குறைவான அளவிலேயே போர் நடத்தியுள்ளது. இஸ்ரேலிய ராணுவம் வெளியிட்ட பல காணொளிகளிலும் கூட அதன் தரைவழி சண்டைகள் பெரும்பான்மையாக அதன் டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களை சார்ந்து இருப்பதையே காட்டுகின்றன.

மதிப்பீடுகளின் அடிப்படையில், தற்போதைய நிலவரப்படி காஸா பகுதிக்குள் 30 ஆயிரம் இஸ்ரேலிய ராணுவ வீரர்கள் இருக்கலாம். ஆனால் இது அதன் ஒட்டுமொத்த ராணுவமான 1.60 லட்சம் செயல் வீரர்கள் மற்றும் 3.60 லட்சம் ரிசர்வ் வீரர்களில் ஒரு சிறு பகுதிதான்.

ராணுவ நிபுணரான ஜஸ்டின் கிரம்ப் பேசுகையில், இங்கே கேள்வி என்னவென்றால் காஸாவில் உள்ள ஒட்டுமொத்த கட்டிடங்கள் மற்றும் சுரங்கங்களை மொத்தமாக அழித்தொழிக்க எத்தனை தரைப்படை வீரர்களை இஸ்ரேல் நிலைநிறுத்தப்போகிறது?

இதற்கு பதிலாக, அது ஹமாஸின் வலுவான தளங்களை குறிவைக்கும் முடிவை எடுக்கலாம். இஸ்ரேல் மிக சிறிய அளவிலான சண்டையிடுதலை தவிர்க்க விரும்புவதாக அவர் நம்புகிறார். இது கண்டிப்பாக பெரும் இழப்பை ஏற்படுத்தும். மேலும், 200க்கும் மேற்பட்ட பணயக்கைதிகளின் உயிருக்கும் ஆபத்து ஏற்படலாம்.

**போருக்குப் பின் என்ன நடக்கும்?**

கேள்வி என்னவென்றால் ஹமாஸை மொத்தமாக அழித்தொழிக்கும் இஸ்ரேலின் இலக்கு சாத்தியப்படுமா? இஸ்ரேலின் மூத்த அதிகாரிகள் கூட வெடிகுண்டுகள் மற்றும் தோட்டாக்களை நம்பும் எந்த ஒரு சிந்தனையையும் மொத்தமாக அழிப்பது சாத்தியமில்லாதது என்றே நம்புகின்றனர்.

ஹமாஸின் பல மூத்த தலைவர்கள் காஸாவுக்கு வெளியே வெவ்வேறு நாடுகளில் தான் வாழ்ந்து வருகின்றனர். காட்ஸை பொறுத்தவரை, இந்த போரில் ஹமாஸ் இயக்கத்தினர் சிலர் பிழைத்திருந்தால் கூட, அவர்கள் “நாங்கள் இன்னும் உயிரோடு இருக்கிறோம், நாங்கள் வென்று விட்டோம்” என்று கூறலாம்.

அதனால்தான், அக்டோபர் 7 சம்பவம் போன்று மீண்டும் நடக்காமல் இருப்பதை உறுதி செய்ய ஹமாஸை மொத்தமாக அழிப்பதை விட, அவர்களுக்கு தண்டனை வழங்குவதில் இஸ்ரேலின் கவனம் இருக்க வேண்டும் என்று நம்புகிறார் கிரம்ப்.

போருக்கு பின்னால் என்ன நடக்கும் என்பதை கூறுமாறு இஸ்ரேல் மீது அமெரிக்காவின் அழுத்தமும் அதிகரித்து வருகிறது.

நிபுணர்களின் கருத்துப்படி, போருக்கு பிந்தைய திட்டமில்லாமல் தொடங்கப்பட்ட பல போர்கள் வெற்றியில் முடிந்ததில்லை. ஆனால், இஸ்ரேல் ராணுவ முகாமில் இந்த திட்டமிடலை மட்டும் சுத்தமாக காண முடியவில்லை.

